# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 80 — 1973 ඔක්තෝබර් 05 වැනි සිකුරාදා — 1973.10.05

80 ஆம் இலக்கம் 1973 ம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 05 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II அ) — விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் |
|---|---|
| பதவிகள்—வெற்றிடம் ... ... | 1041 |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் ... | 1052 |


*கவனிக்க.—அரசாங்க சேவை பரஸ்பர சகாயச் சங்கம் (திருத்தம்) சட்ட மூலம் 1973 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 28 ஆந் திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II ற்கு குறைநிரப்பியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.*

## பதவிகள் — வெற்றிடம்

### இலங்கைக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத் தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள்**

1 : 1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். "இலங்கையர்" என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தில் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

1 : 2 ஏதாவது ஒரு பதவிக்கான வேட்பாளர், அப் பதவிக்கு சிரேட்ட தாரதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அல்லது அதனினும் உயர்வான பரீட்சையில் சித்தியடைந்திருப்பது ஆகக் குறைந்த கல்வித் தகைமையென விதிக்கப்பட்டிருக்குமிடத்து, சிங்கள மொழி மூலம் கல்வி பயின்ற சிங்களவராக இருப்பின் அவர் சிரேட்ட தாரதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சிங்கள மொழியில் சித்தியடைந்து இருத்தல் வேண்டும். (1961 ஜனவரி 1 க்கு முந்திய ஒரு திகதியிலிருந்து அரச சேவையில் இருப்போருக்கும் அரச சேவையில் உள்ள பிற பதவிகளுக்கு நியமனத்தை நாடும் அத் தகையோருக்கும் இத் தேவை ஏற்புடைத்தாகாது.)

1 : 3 விதிக்கப்பெற்ற சிங்கள வினைத்திறமைத்திறன் தேர்வினில் சித்தி எய்தத் தவறியமைக்காக தகுதிகூர்/யானவிடத்து சோதனைக்கான நியமனங்கள் நிறுத்தி வைக்கப்பட்ட "புதிதாகச் சேர்ந்த" அரச உத்தியோகத்தர்களிடமிருந்து பெறப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. அப்படி ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமாயின் 640 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்தின் நியதிகளுக்கமைவாக விதிக்கப்பெற்ற உயர்ந்த சிங்கள வினைத்திறன் தேர்விலிருந்து விலக்களிக்கும் உரிமையை அவர்களுக்குக் கொடுக்கத்தக்க தகைமையை அவர்கள் பெற்றிருத்தல் வேண்டும்.

**2. படிகள்**

2 : 1 அரச சேவையில் உள்ள திருமணமான உத்தியோகத்தர்களுக்கு அவர்களது பதவிகளுக்கு ஏற்புடைய திரட்டிய மாத வேதனத்துடன் மேலதிகமாக தாபனக் கோவையின் vii ஆம் அத்தியாயத்தின் I ஆம் பிரிவில் தரப்பட்டபடி விவாகப் படியும் வழங்கப்படும்.

2 : 2 மாத வேதனம் பெறும் அரச உத்தியோகத்தர்கள், அவர்கள் 180 ரூபாவிலிருந்து 250 ரூபா வரையில் (சகல படிகளும் உட்பட) வேதனமாக/கூலியாகப் பெறும் தொகுதியினரைச் சேர்ந்தவராகின், அவர்களுக்கு விசேட படியாக ரூபா 7.50 கொடுக்கப்படும். அது தேவை சரிசெய்யப்படுவதற்கு உள்ளாகும்.

---

**முக்கிய அறிவித்தல்**

*இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி பகுதி I: தொகுதி (IIஅ) விலும் (IIஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.*

*எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.*

**3. சேவை நிபந்தனைகள் : பொது**

**3 : 1** நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை, திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள், ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக் காலம் விடுக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.

**3 : 2** அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம். அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.

**3 : 3** அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.

**4. நிரந்தரப் பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடைத்தாகும் சேவை நிபந்தனைகள்**

**4 : 1** நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 3 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :—

**4 : 1 : 1** சகல நியமனங்களும், ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய, மூன்று வருடத்துக்குத் தகுதிகாண் நிலையிலேயே இருக்கும். தகுதிகாண் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.

**4 : 1 : 2** அரசாங்க சேவையில் " புதிதாகச் சேர்ந்த " அரச உத்தியோகத்தர்கள் யாவரும் அரசாங்கத்தின் அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கத்துக்காக 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் செய் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் தற்போதுள்ள எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அல்லது அரசாங்கத்தின் மொழிக் கொள்கைக்கு பயன் ஏற்படும் வண்ணம் இனி மேல் புகுத்தக்கூடிய சட்டங்களுக்கும் விதிகளுக்கும் அமையுமாறு வேண்டப்படுவர்.

**4 : 1 : 3** சகல அரச உத்தியோகத்தர்களும், தமது தகுதிகாண் காலத்தின்போது அரசகரும மொழியில் வேலை செய்யும் அறிவைப் பெற்றுக்கொள்ளும்படி வேண்டப்படுவர்.

**4 : 1 : 4** தகுதிகாண் காலம் நிறைவு எய்திய பின்பு பதவியை உறுதி செய்வது, பிறவற்றுள் நியமனம் செய்யப்பட்ட தேதியிலிருந்து முதலாவது வருடத்தினுள் முதலாந்தர சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதினும் இரண்டு வருடத்தினுள் இரண்டாந்தர சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதினும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடத்தினுள் மூன்றாம் தரச் சிங்கள வினைத்திறன் தேர்வில் சித்தி எய்துவதினும் தங்கியுள்ளது. ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம், விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும், அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் சித்தி எய்தும் வரையில் அல்லது 4 : 1 : 5 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும் அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.

**4 : 1 : 5** தகுதிகாண் நிலைக்கால முடிவு வரையில் சிங்கள மொழியில் விதிக்கப்பெற்ற வினைத்திறனை அடையாவிட்டால் தாபனக் கோவையின் II ஆம் அத்தியாயத்தின் 12 : 13 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் பிரயோகமாகும்.

**4 : 1 : 6** சிங்கள மொழி மூலம் சேர்த்துக்கொள்ளப்பட்டவர்கள் மீது 4 : 1 : 3 ஆம் 4 : 1 : 4 ஆம் 4 : 1 : 5 ஆம் பிரிவுகள் பிரயோகிக்கப்படமாட்டா.

**4 : 1 : 7** அரச சேவையின், நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதி செய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகாண் நிலையில் இருக்கவேண்டியதில்லை.

**4 : 1 : 8** தெரிவு செய்யப்பட்ட வேட்பாளர்கள் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்து) தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அறிவதற்கு அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவ பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.

**5. நியமன நியதிகள்**

**5 : 1** அரச சேவையில், நிரந்தரமான பதவிகளிலாவினும் மாதச் சம்பளமுள்ள தற்காலிக பதவிகளிலாவினும் 1.1.72 க்குப் பின்பு நியமனம் பெற்ற அரச உத்தியோகத்தர்கள் (நாட் சம்பளம் கொடுக்கப்படுபவர்கள் நீங்கலாக) யாவரும் தமது திரட்டிய வேதனத்தின் 6 சத வீதத்தை அரசாங்க சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்துதல் வேண்டும். அரசாங்கம் நிதியாண்டின் இறுதியில் கொடுக்கப்படும் திரட்டு வேதனத்தின் 9 சத வீதத்தைக் கொடுத்துதவும். அத்தகைய பதவியை வகிப்பவர் (அவர் விரும்பினால்) அவரது மாதத்திரட்டு வேதனத்திலிருந்து 6 சத வீதம் வரையில் அவரது விருப்பப்படி, சேவைச் சகாய நிதியத்துக்குச் செலுத்தலாம். ஆனால் அத்தகைய உதவு தொகை மீது அரசாங்கம் எந்தவித தொகையும் செலுத்தாது.

**5 : 2** 1971.12.31 க்கு முன்பு அரச சேவையில் ஓய்வூதியமுள்ள நிரந்தரமான பதவிகளை வகித்த அரச உத்தியோகத்தர்கள் 1972.1.1 க்குப் பின்பு அச்சேவையில் உள்ள நிரந்தரமான பதவிகளில் நியமிக்கப்பட்டால் அவர்கள் அவர்களது ஓய்வூதிய உரிமைகளை வைத்திருப்பதற்கு அனுமதிக்கப்படுவர். அத்தகைய அரச உத்தியோகத்தர்கள் முன்பு போல விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்துக்கு பணம் செலுத்துதல் வேண்டும்.

**6. யுத்த சேவைச் சலுகை**

**6 : 1** ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப் படைகளில் சேவையாற்றியவர்களும், தீவிணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர் பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் முழு நேரக் கடமையாற்றியவர்கள், அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காது

விடின், 1939 ஆம் ஆண்டு செப்தெம்பர் மாதம் 3 ஆம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையில் உள்ள அச் சேவைக் காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1946 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன், அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருந்திருத்தல் வேண்டும்.

**7. அரச சேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள்**

7 : 1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்த மட்டில் விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

7 : 2 வேட்பாளர்கள், குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமூகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

7 : 3 ஒரு வேட்பாளரைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். வேட்பாளர் ஒருவரைத் தெரிவு செய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய வேட்பாளரைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.

7 : 4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப் பிழை விண்ணப்பதாரர் தெரிவு செய்யப்படுவதற்கு முன்பாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் அதரிவு செய்யப்பட்ட பின்பு அப் பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.

7 : 5 விளம்பரத் தேவைகளுக்கு அமைவுபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**8. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை**

8 : 1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும் ; அதில், பதில் வேதனம், படி முதலியன சேர்ந்திருக்கா.

---

**கல்வி அமைச்சு**

தொழில் தரத்திலான பதவிகள்—II ஆம் வகுப்பு

கல்வி அமைச்சின் கீழுள்ள சகல திணைக்களங்களிலும் நிலையங்களிலுமுள்ள தகுதிபெற்ற அபேட்சகர்களிடமிருந்தும் வெளி அபேட்சகர்களிடமிருந்தும் கீழ்க்காணும் தொழில் தரத்திலான II ஆம் வகுப்புப் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன :

(i) பொருத்துவோர்.

(ii) மின்சாரத் தொழிலாளர்.

(iii) தச்சர்.

கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு "செயலாளர், கல்வி அமைச்சு (பொது நிர்வாகக் கிளை), மலாய் வீதி, கொழும்பு 2" என்ற முகவரிக்கு 1973.11.1 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும். ஒன்றுக்குக் கூடுதலான பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் ஓர் அபேட்சகர் அத்தகைய பதவி ஒவ்வொன்றுக்கும் புறம்பாக விண்ணப்பம் அனுப்ப வேண்டும். விண்ணப்பிக்கும் பதவியின் பெயர் விண்ணப்பம் அனுப்பப்படும் காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தெளிவாக அடையாளமிடப்பட வேண்டும்.

2. *சம்பள விகிதம்.*—இப்பதவிக்குரிய திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத் திட்டம் பின்வருமாறு :—

ரூ. 2,640—15/60—ரூ. 3,540.

3. *நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.*—இப்பதவி நிரந்தரமானது ; ஆனால் உபகாரச் சம்பள உரித்தற்றது. தெரிவு செய்யப்படுபவர்கள் அரசாங்க சேவை சேமலாப நிதிக்குக் கட்டணம் செலுத்த வேண்டும். 1972.1.1 க்கு முன் திறைசேரியால் அங்கீகரிக்கப்பட்டுள்ளதற்கமைய தொழில் தரங்களில் நிரந்தர ஊழியர் கோப்பிலுள்ள பதவிகளில் நிரந்தர நியமனங்களை வகிப்போர் தெரிவு செய்யப்படுமிடத்து, 10 வருட சேவையைப் பூர்த்தி செய்ததும் அவர்கள் உபகாரச் சம்பள உரித்தந்தஸ்தைப் பெறுவார்கள்.

(i) நியமத்தரி அரசாங்க சேவைக்குப் புதிய முறைப்படி நியமிக்கப்படுவதாயின், அரசகரும மொழிக் கொள்கையின் பொருட்டு பரீட்சார்த்த காலம் 3 வருடங்களாகும்.

(ii) அரசாங்கத்தின் கீழ் நிரந்தர பதவியை வகிக்கும் ஒரு வேலையாளர் தெரிவு செய்யப்படுமிடத்து விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு அவருடைய நியமனம் பதில் கடமை முறையில் அமையும்.

(iii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர் துவீபத்தின் எப்பகுதியிலும் கடமை புரியுமாறு வேண்டப்படுவார்.

(iv) அபேட்சகர்கள் நேர்முகப் பரீட்சை, செயல்முறைப் பரீட்சை ஆகியவற்றின் பெறுபேறுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுவார்கள்.

4. *தகவுத்திறன்.*—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்பவராகத் திருப்தியான சான்று காட்ட வேண்டும் :—

(i) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்று 21 வயதுக்குக் குறையாதவராயும் 30 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது).

(ii) சிறந்த ஒழுக்கமும் உடல்நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(iii) (1) பொருத்துவோர் பதவி—

(அ) வாசிக்க, எழுதக் கூடியவராய் இருக்க வேண்டும்.

(ஆ) அளவுத் திட்டம் ஒன்றினை 1/64" அளவுக்கு வாசிக்கக் கூடியவராயும் பின்னப் பரிமாணங்களைப் பதிவு செய்யக் கூடியவராயும் இருக்க வேண்டும். நுணுக்கமானியை வாசிக்கக்கூடிய ஆற்றல் மேலதிக தகைமையாகும்.

(இ) இத்தொழிலுடன் சம்பந்தப்பட்ட கருவிகளின் பெயர்கள், உபயோகம், அவற்றைப் பேணும் முறை ஆகியவை பற்றி நன்கு அறிந்திருக்க வேண்டும்.

(ஈ) அவர் ஈடுபடக்கூடியதான நீராவி மோட்டர், டீசெல், ஆலைக் கம்மாலை போன்றவற்றுடன் சம்பந்தப்பட்ட விசேட வகையான இணைப்புகள் பற்றிய சிறந்த அறிவு பெற்றிருக்க வேண்டும்.

(உ) வரைதல்களை வாசித்து விளங்கிக் கொள்ளக்கூடியவராய் இருக்க வேண்டும்.

(ஊ) திறமையான முறையில் பொளியவும் அராவவும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும்.

(2) மின்சாரத் தொழிலாளர் பதவி—

(அ) வாசிக்க, எழுதக்கூடியவராய் இருக்க வேண்டும்.

(ஆ) அளவுத் திட்டம் ஒன்றினை 1/32" அளவுக்கு வாசிக்கக் கூடியவராயும் பின்னப் பரிமாணங்களைப் பதிவு செய்யக்கூடியவராயும் இருக்க வேண்டும்.

(இ) அளவிடும் கருவிகள், அவற்றின் உபயோகம் ஆகியவை பற்றிய அறிவு பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) வடங்கள், கம்பிகள் ஆகியவை பற்றியும் அவற்றை அளவுகளின் பிரகாரம் தாப்படுத்தல் பற்றியும் அறிவு பெற்றிருக்க வேண்டும்.

(உ) மோட்டர்கள், 5 சி. வா. வரையுள்ள சிறிய மாற்றிகள் தொடர்பில் காப்பிடல் பரீட்சைகள் நடத்தக் கூடியவராய் இருக்க வேண்டும்.

(ஊ) பல்வேறு வகை பற்ருசு பிடித்தல், கம்பி இணைத்தல் பற்றிய அறிவு பெற்றிருக்க வேண்டும்.

(3) தச்சர் பதவி—

(அ) வாசிக்க, எழுதக் கூடியவராய் இருக்க வேண்டும்.

(ஆ) அளவுத் திட்டம் ஒன்றினை 1/16" அளவுக்கு வாசிக்கக் கூடியவராய் இருக்க வேண்டும்.

(இ) தச்சு வேலையில் நல்ல அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(ஈ) பல்வேறு மரவகைகளின் தன்மைகள், உபயோகங்கள் ஆகியவை பற்றிய அறிவு பெற்றிருக்க வேண்டும்.

(உ) பல்வேறு வகை மூட்டுகளின் பெயர்கள், உபயோகம், அவற்றைத் தயாரிக்கும் முறை ஆகியவை பற்றிய அறிவு பெற்றிருக்க வேண்டும்.

(ஊ) இத்தொழிலுடன் சம்பந்தப்பட்ட எளிதான வரைதல்களை வாசிக்கக்கூடியவராய் இருக்க வேண்டும்.

(iv) மேலே குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுடன் பின்வரும் தகைமைகளையும் அபேட்சகர்கள் பெற்றிருக்க வேண்டும். இத்தகைமைகள் முன்னுரிமைக் கிரமப்படி கொடுக்கப்பட்டுள்ளன.

(1) 3 வருடங்களுக்குக் குறையாது III ஆம் வகுப்பில் சேவை புரிந்திருப்பதற்கமைய III ஆம் அல்லது IV ஆம் வகுப்பில் குறைந்த பட்சம் 5 வருட சேவை புரிந்திருக்க வேண்டும் ; அல்லது

(2) IV ஆம் வகுப்பில் முன்னைய சேவை உட்பட III ஆம் வகுப்பில் 3 வருடங்களுக்குக் குறைந்த சேவை புரிந்த உத்தியோகத்தர்கள் இருப்பதுடன் III ஆம், IV ஆம் வகுப்புகளில் மொத்தமாக 8 வருட சேவை புரிந்திருக்க வேண்டும். இதைக் கணிக்குமிடத்து III ஆம் வகுப்பில் புரிந்த ஒவ்வொரு வருட சேவையும் IV ஆம் வகுப்பில் 2 வருட சேவையாகக் கணிக்கப்படும் ; அல்லது

(3) அங்கீகரிக்கப்பட்ட ஒரு தாபனத்தில்

(அ) II ஆம் வகுப்புத் தொழில் ஒன்றில் குறைந்த பட்சம் 3 வருட சேவை புரிந்திருக்க வேண்டும் ; அல்லது

(ஆ) III ஆம் வகுப்புத் தொழிலில் குறைந்த பட்சம் 2 வருட சேவை உட்பட III ஆம் வகுப்புத் தொழிலில் 6 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும் ; அல்லது

(4) IV ஆம் வகுப்பில் குறைந்த பட்சம் 8 வருட சேவை புரிந்திருக்க வேண்டும் ; அல்லது

(5) உரிய தொழிலில் அங்கீகரிக்கப்பட்ட நிலையம் ஒன்றில் 5 வருடத்துக்குக் குறையாத முன்னைய சேவை உட்பட திணைக்களத்தில் III ஆம் வகுப்பு அல்லது IV ஆம் வகுப்பு வேலையாளராக இருக்க வேண்டும். (மேலுள்ள (1) ஆம், (2) ஆம், (3) ஆம், (4) ஆம் வகுதிகளில் அடங்கும் வேலையாளர்கள் இல்லாதவிடத்து மாத்திரமே இவ்வகுதியில் அடங்கும் வேலையாளர்களின் விண்ணப்பங்கள் சீர்தூக்கப்படும். முன்னைய சேவையை அத்தாட்சிப் படுத்தற்குச் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்).

குறிப்பு.—ஐக்கிய இராச்சிய யுத்த களங்களில் யாதேனும் தொழிலில் புரிந்த சேவை அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிலையத்திலான சேவையாகக் கணிக்கப்படும்.

5. (1) கல்வி அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களிலும் தாபனங்களிலுமுள்ள வேலையாளர்கள் மேலேயுள்ள 4 (i) ஆம் (ii) ஆம் (iii) ஆம் (iv) ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளைப் பெற்றிருக்க வேண்டும்.

(2) வெளி அபேட்சகர்கள், மேலேயுள்ள 4 (i) ஆம் (ii) ஆம் (iii) ஆம் (iv) ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள தகைமைகளுடன் கீழ்க்காணும் தகைமைகளையும் பெற்றிருக்க வேண்டும் :

(அ) உரிய தொழிலில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு தாபனத்தில் II ஆம் வகுப்புப் பதவி ஒன்றில் 5 வருடங்களுக்குக் குறையாத சேவை (சேவையை அத்தாட்சிப்படுத்துவதற்கு சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்).

(ஆ) சிறந்த ஒழுக்கம் உடையவராய் இருக்க வேண்டும் (பிரபல்யம் பெற்றவர்களிடமிருந்து குணச்சான்றிதழ்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும்).

குறிப்பு.—ஐக்கிய இராச்சிய யுத்தகளங்களில் யாதேனும் தொழிலில் புரிந்த சேவை அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிலையத்திலான சேவையாகக் கணிக்கப்படும்.

6. தகுதிபெற்ற அபேட்சகர்கள் தமது விண்ணப்பங்களைத் தத்தம் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்ப வேண்டும். மேலே விதிக்கப்பட்டுள்ள திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள், விதிக்கப்பட்டுள்ள திகதிக்கு முன் உரிய திணைக்களத் தலைவரால் பெறப்பட்டு அவற்றை ஏற்றுக் கொள்ளுமாறு போதிய காரணங்கள் காட்டி அவர் சிபாரிசு செய்தாலன்றி ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

7. அபேட்சகர்களைத் தெரிவு செய்யும் விடயத்தில், பின்வரும் முன்னுரிமைக் கிரமம் பின்பற்றப்படும் :—

(1) கல்வி அமைச்சின் கீழுள்ள சகல திணைக்களங்களிலும் தாபனங்களிலுமுள்ள வேலையாளர்கள்.

(2) வெளி அபேட்சகர்கள்.

8. அபேசகர்கள், வேண்டப்படும் நேரத்தில், பின்வரும் சாதனங்களைச் சமர்ப்பிக்க வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சாட்சிப் பத்திரம் (ஞானஸ்நானப் பத்திரம் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் ஒழுங்குச் சட்ட நோக்கத்தின் பொருட்டு வழங்கப்படும் பிறப்புச் சாட்சிப் பத்திரம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது).

(ஆ) அதியுயர்ந்த கல்விச் சான்றிதழ்களும் உயர்தொழில் தகைமைச் சான்றிதழ்களும்.

(இ) செயல்முறை அனுபவத்தை அத்தாட்சிப்படுத்தும் சான்றிதழ்.

9. இவ் வர்த்தமானியின் I ஆம் பகுதியின் (II அ) ஆம் பிரிவின் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டுள்ளவையும் அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமைபவையுமான பொது நிபந்தனைகளுக்குக் கவனம் கோரப்படுகிறது.

10. விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி அறிவிக்கப்படும். விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுதற்கான கடைசித் திகதியிலிருந்து 21 நாட்களுக்குள் அத்தகைய அறிவித்தலைப் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி அமைச்சின் செயலாளருக்கு (பொது நிர்வாகக் கிளைக்கு) அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் அபேட்சகர்கள் தமது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்கள்.

செயலாளர்,
கல்வி அமைச்சு.

தொடரெண் : பொ. நி. 5
பொது நிர்வாகக் கிளை,
கல்வி அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
25.9.1973.

(மாதிரி விண்ணப்பப் படிவம்)

(விண்ணப்பம் 8½" × 13½" அளவுத் தாளில் தயாரிக்கப்பட வேண்டும்)

விண்ணப்பிக்கும் பதவி :........................................

1. முழுப் பெயர் :————.

2. நிரந்தர விலாசம் :————.

3. சொந்த இடம் :————.

4. விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்றுள்ளபடி சரியான வயது :————. வரு :————. மா :————. நா :————. பிறந்த திகதி ————.

5. பின்வருவோர் பிறந்த இடம் :—

(அ) விண்ணப்பதாரி ————.

(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் :————.

(இ) விண்ணப்பதாரியின் தகப்பன்வழிப் பாட்டன் :————.

(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன்வழிப் பூட்டன் :————.

6. வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா இலங்கையர் :————.

7. கல்வித் தகைமைகள் :————.

(i) பொது :————.

(ii) உயர்தொழில்/தொழில்நுட்பக் கல்வித் தகைமைகள் அல்லது இவ்விருவகைக் தகைமைகள் பற்றிய விபரங்கள் :————.

(iii) சிங்களத்தில்/தமிழில் சித்தியடைந்த அதியுயர்ந்த பரீட்சை பற்றிய விபரங்கள் :————.

8. அறிவித்தலின் 4 (iv) ஆம், 5 (2) ஆம் பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள அனுபவம் பற்றிய விபரங்கள் :————. (சேவை புரிந்த நிலையங்கள், சேவைக்காலம், வகித்த பதவிகள் ஆகியவை குறிப்பிடப்பட வேண்டும்).

9. விவாகம் செய்தவரா ? விவாகம் செய்யாதவரா? தாரமிழந்தவரா ? :————.

10. குற்றவியல் தவறு யாதேனும் தொடர்பில் சட்டமுறை நீதி மன்றத்தில் உம்மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? அங்ஙனமாயின்—

(அ) வழக்கின் திகதி :————.

(ஆ) இலக்கம் :————.

(இ) குற்றத் தீர்ப்பின் தன்மை ஆகிய விபரங்களைக் கொடுக்கவும் :————.

11. பணமுட்டு அற்றவரா, பணமுட்டு இருப்பின் எவ்வளவுக்கு ? :————.

12. உம்மீது யாதேனும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதா ? எடுக்கப்பட்டதாயின், விபரங்களைக் கொடுக்கவும் :————.

13. இராணுவ சேவையிலிருந்து விலகியவராயின் (அ) படைக் கூறு, (ஆ) பதவி (இ) சேர்ந்த, விலகிய திகதிகள் ஆகியவற்றைக் கொடுக்கவும் :————.

14. பாடசாலையிலிருந்து விலகியபின் புரிந்த உத்தியோகம் :————.

(i) வகித்த பதவி :————.

(ii) சேவை புரிந்த காலம் :————.

(iii) விலகியதற்கான காரணம் :————.

15. முன்னர் அரசாங்கத்தின் கீழ் அல்லது ஸ்தல ஆட்சிச் சபையின் கீழ் சேவை புரிந்தவராயின் நிரந்தர அல்லது தற்காலிக பதவி வகித்தீரா என்வும் சேவையிலிருந்து நிற்பாட்டப்பட்டீரா எனவும் குறிப்பிடவும் :————.

(அ) அத்தகைய உத்தியோகம் பற்றிய விபரங்கள் :————.

(ஆ) சேவைக் காலம் :————.

(இ) சேவையிலிருந்து நிற்பாட்டப்பட்டதற்கான காரணம் :————.

16. தற்போதைய உத்தியோகம் :————.

(i) நிலையம் :————.

(ii) பதவியும் தரமும் :————.

(iii) நியமனத் திகதி :————.

(iv) பதவி, உபகாரச் சம்பள உரித்துடையதா ? தற்காலிகமானதா அல்லது சமயோசிதமா ? ————.

(v) படிகள் நீங்கலாக தற்போதைய சம்பளமும் சம்பள அளவுத் திட்டமும் :————.

(vi) அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி :————.

17. ஏனைய விபரங்கள் ————.

இவ்விண்ணப்பத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் உண்மையானவையும் செம்மையானவையும் என இத்தால் அத்தாட்சிப் படுத்துகின்றேன். இங்கு கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமனத்தின் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடுமின்றி சேவையிலிருந்து விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என்றும் அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

**திணைக்கள/நிலையத் தலைவர் அத்தாட்சிப்படுத்தல்**

எனது எண் :
செயலாளர், உங்கள் எண் : பொ. நி. 5/
கல்வி அமைச்சு.

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படுதற்கான கடைசித் திகதிக்கு முன்/பின் * இவ்விண்ணப்பம் இக்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டது. இத்துடன் அனுப்பப்படுகிறது.

...... ஆம் பந்திகளில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் பின்வரும் திருத்தங்களுக்கு அமையச்/சரியானவை *

————,
திணைக்கள/நிலையத் தலைவரின் கையொப்பம்.

பதவிப் பெயர் :————.

திகதி :————.

(* பொருத்தமற்றவற்றைக் கீறிவிடுக)

10-58—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80.

---

எண் : பொ. நி/3/442

**கல்வி அமைச்சு**

மொழிகளினும் பொதுப் பாடங்களினுமான (ஆங்கில மொழி மூல) போதனாசிரியர் பதவி

கல்வி அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்பக் கல்வி நிலையங்களில் மொழிகளினும் பொதுப் பாடங்களினுமான (ஆங்கில மொழிமூல) போதனாசிரியர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்பட்டு 1973 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 27 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக "செயலாளர் (பொது நிருவாகக் கிளை), கல்வி அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2" என்ற விலாசத்துக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். காகித உறையின் இடதுபக்க மேல்மூலையில் "மொழிகளினும் பொதுப் பாடங்களினுமான போதனாசிரியர் பதவி" எனத் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவிகள் நிரந்தரமானவை நியமனங்கள் சேமலாப நிதி அடிப்படையில் அமையும். தெரிவு செய்யப்படும் அபேட்சகர் தனது சம்பளத்தில் 6% த்தை அரசாங்க சேவை சேமலாப நிதிக்குச் செலுத்த வேண்டும். இதற்கான அரசாங்கத்தின் உதவு தொகை 9% ஆகும். நியமனங்கள் சாதாரணமாக 3 வருட காலத்துக்குத் தகுதிகாண முறையில் அமையும். எனினும், நிரந்தரமானதும் உபகாரச் சம்பள உரித்துடையதுமான பதவி ஒன்றினை ஏற்கனவே வகிக்கும் ஓர் உத்தியோகத்தர் தெரிவு செய்யப்படின், அவருடைய உபகாரச் சம்பள உரிமைகள் பாதுகாக்கப்படுவதுடன் ஒரு வருட காலத்துக்குப் பதில் கடமை புரிபவராக அவர் நியமிக்கப்படுவார்.

3. **தகவுத்திறன்.**—விண்ணப்பதாரிகள் ஒவ்வொருவரும் பின்வரும் தகைமைகளுடையவரெனத் திருப்தியான முறையில் நிரூபிக்க வேண்டும் :—

(i) 1973 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 27 ஆந் திகதியன்று 45 வயதுக்கு மேற்படாதவராயும் 30 வயதுக்குக் குறையாதவராயும் இருக்க வேண்டும். (இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவர்களுக்கு அமையாது).

(ii) சிறந்த நல்லொழுக்கமும் தேகாரோக்கியமும் உடையவராய் இருக்க வேண்டும்.

(iii) (அ) "ஆங்கிலத்தை" ஒரு பாடமாகக் கொண்டு, பின்வரும் பாடங்களில் எவ்விரண்டிலேனும், அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகப் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

சிங்களம்/தமிழ், புவியியல், பொருளியல், கணிதம்.

அல்லது

(ஆ) பின்வரும் பாடங்களில் குறைந்தபட்சம் எம்மூன்றிலேனும், அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் ஆங்கில மொழிமூலம் வழங்கப்படும் பட்டம் பெற்றிருக்க வேண்டும்.

புவியியல், பொருளியல், கணிதம், சிங்களம்/தமிழ்

இதனுடன்

சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திர அல்லது கல்விப் பொதுத் தராதர (சா. தர) பத்திரப் பரீட்சையில் "அ" பாடத்திட்டத்தில் ஆங்கிலத்தில் திறமைச் சித்தி அல்லது கல்விப் பொதுத் தராதர (உயர் தர) பத்திரப் பரீட்சையில் அல்லது மேற்ற பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் ஆங்கிலத்தில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

(iv) சிங்களத்தில்/தமிழில் கற்பிக்கக்கூடியவராய் இருத்தல் வேண்டும் அல்லது நியமனத் திகதியிலிருந்து 3 வருட காலத்துக்குள் சிங்களத்தில்/தமிழில் கற்பித்தற்கான தேர்ச்சி பெற வேண்டும்.

**குறிப்பு.**—கற்பித்தல் அனுபவம் விசேட தகைமையாகக் கருதப்படும்.

4. **சம்பள அளவுத்திட்டம்.**—இப்பதவிக்குரிய திரட்டிய வருடாந்தச் சம்பள அளவுத் திட்டம் ரூ. 6,024–4/144–8/180–8,040 ஆகும் ரூ. 6,780, ரூ. 7,500 ஆகிய படிகளில் வினைத்திறமைகாண் தடைகள் உண்டு.

5 வருடத்துக்குக் குறைந்த அனுபவம் பெற்றுள்ள விண்ணப்பதாரி ஒருவர் தெரிவு செய்யப்படுமிடத்து, வேண்டிய அனுபவத்தைப் பெறும் வரை பதில் கடமை புரிபவராக திரட்டிய மாறுத வருடாந்தச் சம்பளம் ரூ 6,024 உடன் நியமிக்கப்படுவார். (1.10.69க்கு முன்னரான ஒத்த சம்பள அளவுத்திட்டம் பின்வருமாறு : ரூ. 3,420 – 4/120 – 8/180 – 5,340.

5. அரச சேவையிலுள்ள, தகைமையுடைய அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் தத்தம் பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்பப்பட்ட வேண்டும். விதிக்கப்படும் திகதிக்குப் பின்னர் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டா. விதிக்கப்படும் திகதிக்குப் பின் இக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளப்படும் எவ்விண்ணப்பமும் விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அவை உரிய பகுதித் தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்டனவென்றும், நியாயமான காரணங்களைக் காட்டி அவற்றை ஏற்றுக் கொள்ளுமாறு அவர் சிபார்சு செய்தாலன்றி ஏற்றுக் கொள்ளப்படமாட்டா. எனினும், ஒவ்வொரு விண்ணப்பதாரியும் விண்ணப்பத்தின் ஒரு பிரதியை விதிக்கப்படும் திகதிக்கு முன் இவ்வமைச்சுக்கு நேரே அனுப்ப வேண்டும்.

6. விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களுடன் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலப் பிரதிகளையல்ல) இணைத்தனுப்ப வேண்டும் :—

(அ) பிறப்புச் சாட்சிப் பத்திரம் (மு.சு. சமயதீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்பட மாட்டாது.).

(ஆ) கல்வித் தராதரப் பத்திரங்கள்.

(இ) உயர்தொழில்/தொழில்நுட்பத் தராதரப் பத்திரங்கள்.

(ஈ) விண்ணப்பதாரியின் தகைமைகள், ஒழுக்கம், இப்பதவிக்கு நியமிக்கப்படுதற்கான அவருடைய தகுதி ஆகியவற்றைக் குறிப்பிடும் மூன்று சமீபகால நற்சாட்சிப் பத்திரங்கள். (அரசினரின் கீழ் ஏற்கனவே சேவையிலுள்ளவர்களைப் பொறுத்தளவில் இவை சமர்ப்பிக்கப்பட வேண்டியதில்லை).

7. விண்ணப்பங்களும் ஏனைய உரிய சாதனங்களேனும் கடிதங்களேனும் இவ்வமைச்சின் செயலாளரின் உத்தியோக விலாசத்துக்கே அனுப்பப்படவேண்டும் ; எக்காரணத்தையிட்டும் அவைகள் எவ்வுத்தியோகத்தரினதும் சொந்தப் பெயருக்கு அனுப்படலாகா.

8. அரச சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ம் பாகம், II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள. அவற்றைப் பார்க்க.

9. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டதாக விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 14 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்தாரிகள், கல்வி அமைச்சின் செயலாளருக்கு (பொது நிர்வாகக் கிளைக்கு) அது பற்றி உடனே அறிவிக்கவேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

செயலாளர்,
கல்வி அமைச்சு.

பொது நிர்வாகக் கிளை,
கல்வி அமைச்சு, மலாய் வீதி,
கொழும்பு 2, 1973 ம் ஆண்டு செப்டம்பர் மீ 25 ந உ.

(மாதிரி விண்ணப்பப் படிவம்)

கல்வி அமைச்சு

($8\frac{1}{2}'' \times 13\frac{1}{2}''$ அளவு அரைத்தாளில் தயாரிக்கப்பட வேண்டும்)

**மொழிகளிலும் பொதுப் பாடங்களிலுமான (ஆங்கில மொழிமூல) போதனாசிரியர் பதவி**

தொடரெண் பெ. நி./3/442

1. முழுப்பெயர் (தெளிவான எழுத்துகளில்) : திரு./திருமதி/செல்வி : ————.

2. தபால் விலாசம் :————.

3. சாதியம் :————.

(வம்சாவழி காரணமாகவா பதிவு காரணமாகவா இலங்கையர் எனக் குறிப்பிடுக. பதிவு காரணமாக நீர் இலங்கைப் பிரசையாயின் பிரசாவுரிமைப் பத்திரத்தின் தொடர்பிலக்கத்தையும் திகதியையும் குறிப்பிடுக).

4. (அ) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்று உள்ளபடி வயது :————. வரு :————. மா :————. நா :————.

(ஆ) பிறந்த திகதி :————. வரு : ———— மா :————. நா :———— (பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதியை இணைக்கவும்).

5. பின்வருவோர் பிறந்த இடம் :————.

(அ) விண்ணப்பதாரி :————.

(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் :————.

(இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் :————.

(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் :————.

6. (அ) விவாகம் செய்தவரா, செய்யாதவரா, தாரமிழந்தவரா ?: ————.

(ஆ) விவாகம் செய்தவராயின், பின்வரும் விபரங்களைக் கொடுக்க :

(i) விவாகத் திகதி :————.

(ii) பிள்ளைகளின் எண்ணிக்கை :————.

7. (அ) 15 வயது தொடக்கம் படித்த பாடசாலைகள், கல்லூரிகள், நிலையங்கள் :————.

| பொதுக் கல்வி | | | உயர்தொழில்/தொழில்நுட்பக் கல்வி (யாதேனும் படித்திருப்பின்) | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | தொடக்கம் | வரை | நிலையம் | தொடக்கம் | வரை |
| | | | | | |

(ஆ) கடைசிப் பாடசாலையிலிருந்து விலகிய திகதி :—

8. கல்வித் தகைமைகளும் கடைசியாகச் சித்தி எய்திய பரீட்சையும் அதன் திகதியும் :————.

(அ) சிங்களத்தில் :————.

(ஆ) ஆங்கிலத்தில் :————.

(இ) தமிழில் :————.

9. உயர்தொழில் தகைமைகளும் தொழில் நுட்பத் தகைமைகளும் அல்லது இவைகளில் யாதேனும்—(யாதேனும் பெற்றிருப்பின்) : ————.

(அ) அவைகள் பெற்ற திகதிகளும் (ஆ) படித்த நிலையங்களும் : ————.

10. வாசிப்பு, எழுத்து, சம்பாஷணை, பேச்சு, மொழிபெயர்ப்பு ஆகியவற்றில் பின்வரும் மொழிகளில் பெற்றுள்ள தேர்ச்சி : ————.

(அ) சிங்களம் :————.

(ஆ) தமிழ் :————.

(இ) ஆங்கிலம் :————.

11. விசேட தகைமைகள் (அறிவித்தலில் விதிக்கப்பட்டுள்ள விசேட தகைமைகளை/அனுபவத்தை அல்லது இவ்விரண்டினையும் பெற்றிருக்கிறீரா ? அங்ஙனமாயின், அவை பற்றிய விபரங்களையும் அவை பெற்றுக் கொள்ளப்பட்ட திகதிகளையும் குறிப்பிடுக) : ————.

12. சட்ட முறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? அங்ஙனமாயின் (அ) தீர்ப்பு அளிக்கப்பட்ட திகதி (ஆ) வழக்கு எண், (இ) குற்றத் தீர்ப்பின் தன்மை ஆகியவற்றைக் குறிப்பிடுக :————.

13. நீர் பணமுட்டு உற்றவரா ? பணமுட்டு உமக்கு இருப்பின், எவ்வளவுக்கு ?:————.

14. வேறு யாதேனும் விபரங்கள் (விசேட உரிமைகள் ஆதியன) : ————.

15. நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுத்துதவியவர்களின் பெயர்களும் பதவிப் பெயர்களும் (அத்தகைய பத்திரங்களின் பிரதிகள்—மூலப் படிகள் அல்ல—இணைத்தனுப்பப்படவேண்டும். ஏற்கனவே அரசினர் சேவையிலிருப்பவர்கள் இவ்விபரங்களைக் கொடுக்க வேண்டியதில்லை) :————.

16. முன்னர் யாதேனும் படையில் சேவை புரிந்து விலகியவராயின் : ————.

(அ) படைக் கூற்றின் பெயர் :————.

(ஆ) வகித்த பதவி :————.

(இ) சேர்ந்த, விலக்கப்பட்ட திகதிகள் ஆகியவற்றைக் குறிப்பிடுக :————.

17. (அ) பாடசாலைகளிலிருந்து விலகிய காலம் தொடக்கம் புரிந்த உத்தியோகம் :————.

(i) நிலையங்களின் பெயர் :————.

(ii) வகித்த பதவிகள் :————.

(iii) சேர்ந்த, விலகிய திகதிகள் :————.

(iv) விலகியதற்கான காரணம் :————.

(ஆ) அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு ஸ்தல ஆட்சிச் சபையின் கீழ் முன்னர் கடமை புரிந்திருப்பின் நிரந்தர பதவியா அல்லது தற்காலிக பதவியா வகித்தீர், சேவை எந்நேரத்திலேனும் நிறுத்தப்பட்டதா ஆகிய விபரங்களையும் (அ) அத்தகைய உத்தியோகம் (ஆ) சேர்ந்த விலகிய திகதிகள் (இ) வேலை நிறுத்தப்பட்டதற்கான காரணங்கள் ஆகியவற்றையும் குறிப்பிடவும் :————.

18. தற்போது வகிக்கும் உத்தியோக விபரங்கள் :————.

(i) நிலையத்தின் பெயர் :————.

(ii) பதவிப் பெயரும் பதவியின் தரமும் :————.

(iii) இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதா/தற்காலிகமானதா/சமயோசிதமா :————.

(iv) தற்போதைய (சகாயப்படிகள் உட்படாத) வருடாந்தச் சம்பளமும் சம்பள விகிதமும் (ஒன்றுதிரட்டிய சம்பளம் பெறுபவராயின் ஒன்றுதிரட்டிய வருடாந்தச் சம்பளத்தையும் சம்பள அளவுத்திட்டத்தையும் குறிப்பிடவும்) :————.

(v) அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி :————.

(vi) தற்போதைய பதவியில் உறுதிப்படுத்தப்பட்டிருக்கிறீரா ? அங்ஙனமாயின் உறுதிப்படுத்தற் கடிதத்தின் பிரதியை, இணைக்க :————.

19. இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமிக்கப்படுதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்டஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

இடம் :————.

திகதி :————.

10–59—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

---

இல. வெ. மு/4/157

**கல்வி அமைச்சு**

பாக்கிஸ்தான் அரசாங்க கலாசாரப் புலமைப் பரிசில்கள், **1973 ஆம் ஆண்டு**

பாக்கிஸ்தான் அரசாங்க கலாசார புலமைப் பரிசில்கள் திட்டத்தின் கீழ் 1973 ஆம் ஆண்டின்போது பட்டமுன் மட்டத்தில் விவசாய எந்திரவியலிலான கற்கைகளுக்குப் பாக்கிஸ்தான் அரசாங்கத்தால் வழங்கப்படும் புலமைப் பரிசில்களை அளித்தற் பொருட்டு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தமது பயிற்சி நெறியை பூர்த்தி செய்துகொண்டு திரும்பி வந்த பின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக்கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப்புலமைப் பரிசில்கள் வகுக்கப்பட்டுள்ளன.

குறிப்பு 1.—புலமைப் பரிசிலால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமை புரியும் திணைக்களத் தலைவர் 16.5.60 ஆந் திகதிய 514 ஆம் இலக்கத் திறைசேரிச் சுற்றுநிருபத்துக்கிணங்க அத்தாட்சிப்படுத்தி அச் சுற்றுநிருபத்தில் கேட்டுள்ள பிரகாரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுபட்டாலன்றி எவ் அரசாங்க ஊழியரினது விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

குறிப்பு 2.—சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதாரவில் நடைபெறும் இத்தகைய நிலையங்கள் ஆகியவற்றில் கடமை புரிபவர்களின் விண்ணப்பங்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். படிவத்தின் 27 ஆம் கூட்டை பூரணப்படுத்தி விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட தலைவர் கேட்கப்பட வேண்டும்.

குறிப்பு 3.—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஒரு விண்ணப்பமே அனுப்புவதுடன் ஒரு கற்கை நெறிக்கே விண்ணப்பிக்க வேண்டும்.

2. கால எல்லை.—4-6 வருட கால அளவினதாகும்.

எனினும், துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்ற காரணங்களையிட்டு பாகிஸ்தான் அரசாங்க அதிகாரிகளின் தற்றுணிபுக்கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின்போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

3. தகவுத்திறன்.—அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் :—

(i) ஸ்ரீ லங்கா பிரசைகளாக இருக்க வேண்டும்.

(ii) 1.9.73 அன்று 18—25 வயதுக்கு இடைப்பட்ட வயதினராக இருக்க வேண்டும்.

(iii) இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி, க. பொ. த. (சா. த.) பத்திரப் பரீட்சையில் 6 பாடங்களில் சித்தி அடைந்திருக்க வேண்டும்.

(iv) க. பொ. த. (சா. த.) பத்திரப் பரீட்சையில் சிங்கள/தமிழ் மொழியிலும் ஆங்கில மொழியிலும் திறமைச் சித்திகள் பெற்றிருக்க வேண்டும்.

(v) குண்டசாலை விவசாயப் பாடசாலையால் வழங்கப்படும் தகுதித் தேர்வுச் சான்றிதழ் அல்லது சமமான தகைமை பெற்றிருக்க வேண்டும்.

குறிப்பு 1.—அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறி செய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பாடுகளை 1.9.1973 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

குறிப்பு 2.—தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர்களும் நிரந்தர நியமனங்களை வகிக்கும், ஆனால் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படாதவர்களான அரசாங்க ஊழியர்களும் தங்கள் பதவிகளைத் துறப்பதற்கு சம்மதமாயிருந்தாலன்றி இவற்றுக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராகார். படிவத்தின் 15 (ஈ) ஆம் கூட்டில் அத்தகைய விருப்பம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

4. அளிப்பு நிபந்தனைகள்.—இப்புலமைப் பரிசில்கள் கீழ்க்காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும் :—

(அ) மாதாந்தம் ரூபா 250 சகாயப்படி (விடுதிச்சாலை, கல்லூரிக் கட்டணங்கள் ஆகியவற்றை மாணவர் இதைக் கொண்டு செலுத்த வேண்டும்).

(ஆ) சாதனங்களுக்கென வருடாந்தம் ரூபா 200 சகாயப்படி.

(இ) அங்கு மேற்கொள்ளும் கற்கைச் சுற்றுலாக்களுக்கென, வருடாந்தம் ரூபா 200 சகாயப்படி.

(ஈ) மாணவர்களுக்கு வைத்திய செலவுகள் ஏற்படின், அது வருடாந்தம் ரூபா 25 வரை மீட்டளிக்கப்படும்.

மு. கு.—பாக்கிஸ்தானுக்குப் போய்த் திரும்புவதற்கான பிரயாணச் செலவுகள் வெகுமதி அளிப்பு நிபந்தனைகளில் சேர்க்கப்பட்டில்லை. தெரிவு செய்யப்படும் அபேட்சகர்களே அச்செலவைப் பொறுக்க வேண்டும். இச்செலவை பொறுக்கச் சம்மதமாவென விண்ணப்பதாரிகள் விண்ணப்பப் படிவத்தின் 24 ஆம் கூட்டில் கூற வேண்டும்.

**குறிப்பு.**—இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

5. **நேர்முகப் பரீட்சை.**—தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் ஒரு நேர்முகப் பரீட்சைக்குச் சமூகமளிக்க வேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்விதச் செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தாரா தாரப் பத்திரங்கள், பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப் படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக் கூடியவராய் இருக்க வேண்டும்.

6. **உடன்படிக்கை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், பாக்கிஸ்தானுக்குச் செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் :—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப் படவேண்டியது) ஸ்ரீ லங்கா குடியரசின் கீழ் சேவை புரிவதாகவும் ;

(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து புலமைப் பரிசின் முழுச் செலவையும் (அதாவது, புலமைப் பரிசு தொடர்பாக ஸ்ரீ லங்கா குடியரசுக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும்—அரசினர் ஊழியர்களைப் பொறுத்த வரையில் சம்பளங்கள், சகாயப் படிகள் ஆதியன உட்பட) ஸ்ரீ லங்கா குடியரசுக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

7. **வைத்தியப் பரீட்சை.**—தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் பாக்கிஸ்தானில் கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்தற்கு வேண்டிய உடல்நலன், மனநலன் உடையவரா என பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தியர் சபையினால் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் தேற வேண்டும்.

8. உத்தேச கற்கை நெறியைப் பின்பற்றுவதால், அரசாங்க உத்தியோகத்தர்களைப் பொறுத்தவரையில், கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் உரித்துடையராகார். ஏனையோரைப் பொறுத்தவரையில் அவர்கள் தமது பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்து திரும்பியதும் அவர்களுக்கு உத்தியோகம் அளிக்கும் பொறுப்பை அரசாங்கம் ஏற்கவில்லை.

9. விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு மீழ்க்கப்படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

10. தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

11. நியமனங்கள் முகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் அவைகளை ஏற்றுக் கொள்தல் அளிப்பை வழங்கும் முகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்து கொள்ள வேண்டும்.

12. ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

13. இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

14. இவ்வலுவலகத்திலிருந்து பெறப்பாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்பட வேண்டிய விண்ணப்பங்கள் 1973.10.19 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி அமைச்சின் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

15. ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூபா 10 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூபா 10/- பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுப்படமாட்டாது.

16. ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் உரிய நிலையத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது பதவியிலிருந்து விலகச் சம்மதிக்குமிடத்தும் இத் தேவை அமையும். கல்வி அமைச்சின் கீழுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பிரதேச வித்தியாதிபதி மூலம் அனுப்புதல் வேண்டும்.

17. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத் தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி அமைச்சின் காரியதரிசிக்கு அது பற்றி உடனே அறிவிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத் தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

காரியதரிசி,
கல்வி அமைச்சு.

கல்வி அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2.
1973.9.25.

10-65—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

---

## அரசாங்க கணக்காளர் சேவையில் IV ஆம் வகுப்புக் கணக்காளர் பதவிகள்

அரசாங்க கணக்காளர் சேவையில் IV ஆம் வகுப்புக் கணக்காளர் பதவிகளுக்கு அரசாங்க கணக்காளர் சேவையின் பிரமாணக் குறிப்பின் பத்தி 4A இன் பிரகாரம் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே இணைக்கப்பட்டுள்ள அமைப்பினதான படிவங்களிலான விண்ணப்பங்கள், இணைந்த சேவைகள் பணிப்பாளர், அரசாங்க நிருவாகத் திணைக்களம், ரொறிங்ரன் சதுக்கம், கொழும்பு 7 என்ற முகவரிக்கு 1973 ஒற்றோபர் 31 ஆந் தேதியில் அல்லது அதற்கு முன்னர் அவருக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படவேண்டும்.

**குறிப்பு.**—விண்ணப்பப்படிவம் அல்லது அத்தகைய விண்ணப்பப் படிவம் தொடர்பான ஒரு கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச் சாட்டு எதுவும் கவனிக்கப்பட மாட்டாது. விண்ணப்பங்களை அனுப்புவதற்குக் கடைசித் தேதி வரையும் தாமதிப்பவர்கள், அதனால் வரும் இடருக்குத் தாமே பொறுப்பாவர்.

2. **பணிக்கமர்த்தும் நியதிகளும், சேவை நிபந்தனைகளும்—**

(i) இப்பதவிகள் நிரந்தரமானவை ஆனால் ஓய்வூதியமற்றவை. நியமனத் தேதியிலிருந்து அரசாங்க சேவை சகாய நிதிக்கு உங்களால் உதவுதொகை செலுத்தப்படல் வேண்டும் ;

(ii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், மூன்றுண்டுகளுக்கு தகுதி காண் நிலையில் நியமிக்கப்படுவர். தெரிவு செய்யப்படும் அபேட்சகரொருவர், நிரந்தரமான, ஓய்வூதியத்திற்குரிமையுடைய நியமனமொன்றை 1972, ஜனவரி 01 ஆந் தேதிக்கு முன்னர் அரசாங்கத்தின் கீழ் வகிப்பவராகவிருந்தால் அவர் முதற்கண், குறிப்பிட்டவொரு காலத்திற்குப் பதில் கடமையாற்றுமாறு நியமிக்கப்படுவார் ;

(iii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், அரசகருமமொழிக் கொள்கை நோக்கத்திற்காகப் " புதிதாகச் சேர்ந்த " வர்களானால், தாங்கள் 1956 ம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்காக இப்பொழு

துள்ள ஏதேனும் சட்டங்களுக்கும், விதிகளுக்கும் அல்லது வருங் காலத்திற் புகுத்தப்படக் கூடியனவான ஏதேனும் சட்டங் களுக்கும் விதிகளுக்கும் இணங்கியொழுகுவாராகவென்னும் நிபந்தனைகளுக்கு உட்படுதல் வேண்டும் ;

(iv) தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் "புதிதாகச் சேர்ந்தவர் களானால்" தகுதிகூர் காலத்திற் சிங்களத்தில் தேர்ச்சி பெறு மாறு வேண்டப்படுவார் ;

(v) தகுதிகூர் கால முடிவில் நியமனத்தில் உறுதிப்படுத்தலானது, பிறவற்றுடன் விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சி சோதனை களில் சித்தியடைவதையும் பொறுத்துள்ளது. தெரிவு செய் யப்படும் அபேட்சகர்கள், விதிக்கப்பட்ட காலத்திற்குள் இச் சோதனைகளில் சித்தியெய்தத் தவறினால், சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவர்.

3. **சம்பளமும் படிகளும்.**—வருடாந்த தொடக்க திரட்டிய சம்பளம் ஆண்டொன்றுக்கு ரூபா 6,720—ரூபா 360 இல்12—ரூபா 11,040 முதலில் வழக்கப்படும். பொருத்தமான நிறுவகங்களில் அங்கத்துவம் பெறும் அபேட்சகர்கள் ஆண்டொன்றுக்கு 9,960 ரூபா திரட்டிய சம்பள நிலையில் அமர்த்தப்படுவர். அவர்கள் I ஆம் வகுப்பில் மூன்றாண்டுச் சேவையினை முடித்ததும் III ஆம் வகுப்புக்குப் பதவியேற்றஞ் செய்யப்படுதற்குப் பரிசீலிக்கப்படுவதற்குத் தகவுடையவராவர். பிற சேவை நியதிகளும் நிபந் தனைகளும் அவ்வப்பொழுது திருத்தப்பட்டவாறான 1971 ஆம் ஆண்டு யூன் மாதம் 04 ஆம் தேதிய இலங்கை அரசாங்கச் செய்திமடலில் விதிக் கப்பட்டவாறாகும்.

4. **தேவைவான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளையுடையவரென்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும்:—

(அ) மிகச் சிறந்த நல்லொழுக்கமும் உடல்நலமும் உடையவராயிருத் தல் வேண்டும் ;

(ஆ) பரம்பரையினால் அல்லது பதிவினால் இலங்கையராயிருத்தல் வேண்டும் ;

(இ) 1973 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 31 ஆந் தேதியன்று 42 வய திற்கு மேற்படாதவராயிருத்தல் வேண்டும் (இவ்வயதெல்லை, ஏலவே அரசாங்க சேவையிலுள்ள ஆட்களுக்கு ஏற்புடைய தாகாது) ;

(ஈ) இலங்கைப் பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவகத்தின் இறுதிப் பரீட்சையிற் சித்தியடைந்து இருத்தல் வேண்டும் ; அல்லது,

(உ) ஆக்கச் செலவு, முகாமைக் கணக்காளர் நிறுவகத்தின் (ஐ. சி எம். ஏ.), (யூ. கே.) இறுதிப்பரீட்சையில் சித்தியடைந்து இருத் தல் வேண்டும் ;

(ஊ) (ஐக்கிய இராச்சியப்) பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவகத்தின் இறுதிப்பரீட்சையிற் சித்தியடைந்து இருத்தல் வேண்டும் ;

(எ) சான்று பெற்ற கூட்டுக் கணக்காளர் நிறுவகத்தின் (ஐ. இ.) இறுதிப்பரீட்சையிற் சித்தியடைந்து இருத்தல் வேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது யாவற்றையும் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும் பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும் :—

(அ) பிறப்புப்பதிவுச் சான்றிதழ் ;

**(கவனிக்குக :** சமய தீட்சைச் சான்றிதழ்கள் அல்லது உதவி நன்கொடைபெறும் பாடசாலைகளுக்காய ஒழுங்கு விதிச் சட்டக் கோவையின் நோக்கத்திற்காக வழங்கப்பட்ட பிறப்புச் சான்றி தழ்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா) ;

(ஆ) பட்ட அல்லது மிகவுயர்ந்த சான்றிதழ் ;

(இ) இரண்டு நற்குணச்சான்றிதழ்கள் ; இவற்றுள் ஒன்று அறிவாய்வுப் பணிப்பாளர். கல்லூரி ஆசிரியர், அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாகவிருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர் தொழிற் தகைமைச் சான்றிதழ்கள், அத்துடன்/அல்லது தொழினுட்பத் தகைமைச் சான்றிதழ்கள் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக வுயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு .**—(i) சாதனங்களையோ சாதனங்களின் பிரதிகளையோ விண்ண பப்படிவத்துடன் இணைத்தலாகாது ;

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டப்படும்பொழுது, அவற் றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக் கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங் கள் அவ்வத் திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்பப்படுதல் வேண் டும். விண்ணப்பத்தின் பிரதியொன்று விண்ணப்ப முடிவு திகதிக்கு முன்னர் இணைந்த சேவைகள் பணிப்பாளர், அரசாங்க நிருவாகத் திணைக் களம், ரொறிங்ரன் சதுக்கம், கொழும்பு 7 என்ற முகவரிக்கு நேரடியாக் அனுப்பப்படல் வேண்டும்.

7. நியமிக்கப்படும் அபேட்சகர்கள் மூன்றாண்டுக் காலத் தகுதிகூர் காலத்தைப் பூர்த்தி செய்தவுடன் அவர்கள் தங்கள் பதவிகளில் உறுதிப்படுத்தப்பட முன்னர் ஒரு சோதனையில் பின்வரும் பாடங்களில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர் :—

(i) நிதி ஒழுங்கு விதிகள் ;

(ii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விதிகள், இலங்கை அரசாங்க தாபனச் சட்டக் கோவை.

8. இச் செய்திமடலின் பகுதி I, பிரிவு (II அ) இன் தொடக்கத்தில் வெளியிடப்பட்டுள்ள, அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்குச் செய் யப்படும் நியமனங்களுக்கு ஏற்புடையதான பொது நிபந்தனைகளைப் பார்க்க.

9. விண்ணப்ப முடிவுத் தேதியிலிருந்து மூன்று கிழமைகளுக்குள் விண்ணப்பம் கிடைத்தமை பற்றி விண்ணப்பக்காரர்கட்கு அறிவிக்கப்படும். விண்ணப்பத்தைப் பெற்றமை பற்றி அறிவித்தல் கிடைக்காவிட்டால் அதுபற்றி அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி, உண்ணாட்டு அலுவல்கள் அமைச்சின் செயலாளர், கொழும்பு 7 என்னும் முகவரிக்கு உடனடியாக அறிவிக்க வேண்டும்.

பி. எச். சிறிவர்த்தன,
அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி உள் நாட்டு அலுவல்கள் அமைச்சின் செய லாளரும் அரசாங்க நிருவாக பதில் பணிப் பாளர் அதிபதியும்.

அரசாங்க நிருவாகம், உள்ளூராட்சி, உள்நாட்டு
அலுவல்கள் அமைச்சு,
ரொறிங்ரன் சதுக்கம்,
கொழும்பு 7,
1973 ம் ஆண்டு செத்தெம்பர் 24.

விண்ணப்ப மாதிரிப் படிவம்

**அரசாங்க கணக்காளர் சேவையிலுள்ள IV ஆம் வகுப்புக் கணக்காளர் பதவிகள்**

இல :

(அலுவலக உபயோகித்திற்கு மட்டும்)

1. முழுப்பெயர் :————.
(உறுப்பெழுத்தில்)

2. அஞ்சல் முகவரி :————.
(அஞ்சல் முகவரி மாற்றம் ஏற்பட்டால் உடன் அறிவிக்கப்படுதல் வேண்டும்).

3. பிறந்த தேதி :—.
வருடம் :————, மாதம் :————, தேதி :————.

4. உள்ளூர் விண்ணப்பக்காரர்களுக்கு முடிவடையுந் தேதியன்றுள்ள சரியான வயது :—
வருடம் :————, மாதம் :————, நாள் :————.

5. நீர் இலங்கைப் பிரசையா ? :————.
(வம்சாவழி அல்லது வதிவுப் பிரசையா என்று குறிப்பிடுக)
(குறிப்பு இல. (1) பார்க்குக)

6. பிறந்த இடம் (குறிப்பு இல : (2) பார்க்குக)—
(அ) விண்ணப்பதாரர் :————.
(ஆ) தகப்பன் :————.
(இ) தகப்பன்வழிப் பாட்டன் :————.
(ஈ) தகப்பன் வழிப்பூட்டன் :————.

7. (அ) ஆணா, பெண்ணா ? :————.
(ஆ) விவாகமானவர், தனிப்பட்டவர், விதவை, தாரமிழந்தவர் : ————.

8. (1) சிங்களம், (2) தமிழ், (3) ஆங்கிலம் சித்தி அடைந்த ஆகக்கூடிய பரீட்சை :————.

9. 12 ஆம் வயதிலிருந்து படித்த பாடசாலைகள், கல்லூரிகள், வேறுங் கல்வித்தாபனங்கள் :————.

| பொதுக் கல்வி | | உத்தியோகக் கல்வி | |
|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | தொட்டு முடிய | கல்வித் தாபனம் | தொட்டு முடிய |
| (1) | | | |
| (2) | | | |
| (3) | | | |
| (4) | | | |
| (5) | | | |

10. (அ) நீர் கடன் தொல்லைகள் இல்லாதவரா ? :————.
இருக்கும் பட்சத்தில் கடன் பொறுப்புகளின் அளவு என்ன :————.

(ஆ) சட்ட நீதிமன்றங்களில் ஏதாவது குற்றப்பாதகத்திற்குக் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறீரா ? அப்படியானல் வழக்கிலக்கத்தை எடுத்துக்காட்டித் தேதிகளோடு முழு விபரங்களையும் குறிப்பிடுக :————.

11. பாடசாலைக் கல்வி, உத்தியோகக் கல்வி, நுண்தொழிற் கல்வித் தகைமைகள் :————.

(பல்கலைக்கழகத்துச் சகல பட்டங்கள், திறமைகள் உத்தியோகக் கல்வி/அல்லது நுண்தொழிற் கல்வித் தகைமைகள் முதலிய வற்றின் விபரங்களைத் தேதி, சித்தித் தரம் இருந்தால் அவை, எடுத்த பாடங்கள், கல்வித் தாபனப் பெயர்கள் இவற்றுடன் தருக)

12. இப்போதைய தொழிலும், முன்னர் ஏதேனும் பதவியில் இருந்தால் அப்பதவிகளும் :————.

(பதவி ஏற்றுக் கொண்ட தேதியும் விட்டு நீங்கிய தேதியும் கடைசியாகப் பெற்ற ஆண்டுச் சம்பளமும் குறிப்பிடப்பட வேண்டும் )

**முக்கியம்.**—அரசாங்க உத்தியோகத்திலிருந்து நீங்கிய காரணம் கீழேயுள்ள 13 ஆம் நிரப்பு பிரிவிற் குறிப்பிடப்படல் வேண்டும்.

| | பதவி | தொட்டு முடிய | ஆண்டுச் சம்பளம் |
|---|---|---|---|
| 1. | | | |
| 2. | | | |
| 3. | | | |
| 4. | | | |
| 5. | | | |
| 6. | | | |
| 7. | | | |
| 8. | | | |

13. மேலும் வேறு விபரங்கள் :————.

14. தங்களைப் பற்றிய விபரங்களைப் பெறக்கூடிய தங்களுக்கு அறிந்த இருவரின் பெயர்களையும் முகவரிகளையும் தருக :—.
(i) ————.
(ii) ————.

15. இந்த விண்ணப்பத்திரத்தில் என்னுல் தரப்பட்டிருக்கும் விபரங்கள் யாவும் உண்மையானவை என்றும் சரியானவை என்றும் நான் அத்தாட்சிப்படுத்துகிறேன். இத்னுள் அடங்கியிருக்கும் விபரங்கள் எவையேனும் பொய்யானவை, சரியற்றவையென்று தெரிவு செய்யப்படுமுன் அறிந்தால் தகுதியற்றவனுக்கப்படுவேனென்றும், நியமனம் பெற்றபின் சரியற்றவை என்று கண்டுபிடிக்கப்பட்டால் நட்டஈடு எதுவுமின்றி பதவியால் நீக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

தேதி :————.

**குறிப்புகள்.**—(1) இலங்கைப் பதிவுப் பிரசையானுல் உமக்கு வழங்கப்பட்ட பிரசைப் பத்திரத் தொடர்பு இலக்கமும் தேதியும் குறிப்பிடுக.

(2) விண்ணப்பகாரர் இலங்கையிற் பிறந்தவராயின் (அ) அல்லது (இ) (ஈ) இரண்டும் (அ) உடன் சேர்த்து நிரப்பப்படல் வேண்டும். விண்ணப்பக்காரர் இலங்கையிற் பிறக்காதவராயின் (ஆ) உம் (இ) உம் அல்லது (இ) உம் (ஈ) உம் (அ) விட்டு நிரப்பப்படுதல் வேண்டும்.

அபேட்சகர் அரசாங்க சேவையில் இருப்பவரெனில் அப்பகுதித் தலைவரின் அறிக்கை.

————,
திணைக்கள/அமைச்சுத் தலைவரின்
கையொப்பம்.

10–48—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

---

## நீதிச்சேவைகள் ஆலோசனைச் சபை

### காதியின் பதவி

*1965 ஆம் ஆண்டின் 1 ஆம், 1969 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் செய்சட்டங்களினுல் திருத்தப்பட்டவாறுன (115 ஆம் அத்தியாயமான) முஸ்லீம் விவாக, விவாக நீக்கச் சட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தின் ஏருவூர்பற்று அர்சிறைப்பிரிவின் காதியின் பதவிக்கு நியமிக்கப்படுவதற்கென நீதிச்சேவைகள் ஆலோசனைச் சபையினுல் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றது.*

*2. விண்ணப்பதாரிகள் ஆண் முஸ்லீம்களாகவும், இலங்கைப் பிரஜைகளாகவும், முப்பத்தைந்து வயதிற்குட்படாதவர்களாகவும், நல்ல ஒழுக்கமும் நல்ல நிலையிலும் உள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.*

*3. அமைச்சரவையினுல் தெரியப்படுபவர், நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்படும் ஒரு காலவெல்லைக்கு நியமிக்கப்படுவர்.*

*4. ஒரு காதி எப்பிரதேசத்துக்கென நியமிக்கப்படுகிருரோ அவர் அப்பிரதேசத்திலேயே வசிக்கக் கடப்பாடுடையர்.*

*5. விண்ணப்பங்கள் என்னிடமிருந்து பெறக்கூடிய விசேட படிவங்களில் செய்யப்படுதல் வேண்டும். அவை 1973 நவம்பர் 5 ஆம் திகதிக்கு முன்னதாக இந்த அலுவலகத்தைச் சேர்தல் வேண்டும்.*

*லயனல் சமரதுங்க,*
*செயலாளர்,*
*நீதிச்சேவைகள் ஆலோசனைச் சபை.*

*நீதிச்சேவைகள் ஆலோசனை ஒழுக்காற்றுச்*
*சபைகள் அலுவலகம்,*
*தபாற் பெட்டி 573,*
*சி/52, கெப்பிட்டிப்போல வீதி,*
*கொழும்பு 5,*
*24 செப்ரெம்பர், 1973.*

*10-51—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80.*

---

## கொழும்பு மாவட்டத்தின் அழுத்குறு கோறளை வடக்கு (நீர்கொழும்பு பட்டினம்) பிரிவிற்கு விவாக (பொது) பதிவாளர் பதவி

அழுத்குறு கோறளை வடக்கு பிரிவிற்குள் நிரந்தரமாகக் குடியிருப்பவர்கள் அப்பிரிவில் சில காலம் வசிக்கின்றவர்கள் அல்லது பொதுமக்களால் அங்கீகரிக்கப்படக்கூடியவர்கள் ஆண் பெண் இருபாலரும் விண்ணப்ப முடிவு திகதியன்று இருபத்தொரு வயதுக்குக் குறையாதவர்களாயின் மேற்படி பதவிக்கு விண்ணப்பித்துக் கொள்ளலாம். அரசாங்க சேவையில் கடமையாற்றுபவர்களை பொறுத்தளவில் இவ்வயதெல்லை கவனிக்கப்பட மாட்டாது.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தாரதரங்களும் ஏனைய பிற தராதரங்கள், நிபந்தனைகள் ஆகிய விபரங்கள் அடங்கிய அறிவித்தல்கள் இந்த அலுவலகத்திலும், காரியாதிகாரியின் அலுவலகங்களிலும், கிராமசேவையாளர்களின் அலுவலகங்களிலும், உள்ளூராட்சி சபை அலுவலகங்களிலும், கிராம நீதிமன்றங்களிலும், தபால் அலுவலகங்களிலும், கூட்டுறவு தாபன நிலையங்களிலும், பொலிஸ் ஸ்தானம், சனசமூக நிலையங்களிலும், இந்தப் பிரிவிற்குள் இருக்கும் பிரசித்த இடங்களிலும் காரியாலயங்களிலும் பார்வைக்கு வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப் பத்திரத்தில் நிரப்புவதோடு 1973ம் ஆண்டு கார்த்திகை மாதம் 9 ம் திகதியன்று அல்லது அதற்கு முன்பதாக எனக்குக் கிடைக்கக்கூடியதாக பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படல்வேண்டும்.

எம். பி. திசனுயக்க,
மேலதிக மாவட்டப் பதிவாளர்.

*கொழும்பு மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,*
*1973, ஐப்பசி 01 ந் திகதி.*

*10-81—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80.*

## இலங்கை அரசினர் புகையிரதப்பகுதி

புகையிரத முகவர் பதவி (போக்குவரவு) அக்போபுர

இத்திணைக்களத்தில் புகையிரத முகவர் (போக்குவரவு) அக்போபுர பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. மிகக் குறைந்த தரகாக ரூபா 160 வழங்கப்படும். இந் நிலையம் திருகோணமலைப் பாதையில் கல்லோயா, கந்தளாய் புகையிரத நிலையத்திற்குமிடையில் அமைந்துள்ளது.

**இம் முகவர் நிலையம் அமைந்திருக்கும் சுற்றுடலில் வசிக்கும் அல்லது கூறப்பட்ட அச் சுற்றுடலில் உரிமையளித்த நலன்களைக் கொண்டிருக்கும் ஆண்கள் மட்டுமே இப்பதவிக்கு விண்ணப்பித்தல் வேண்டும்.** விண்ணப்பதாரிகள் விண்ணப்பங்கள் முடிவடையும் தினத்திலன்று 21 வயதிற்குக் குறையாதவராயும் 40 வயதிற்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் இரு தடவைக்கு மேற்படாது தோற்றிய கல்விப் பொதுத் தாரதர (சாதாரண) பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கில மொழியும் எண்கணிதம், கணிதம் அல்லது வர்த்தக கணிதமும் உட்பட குறைந்தது ஆறு பாடங்களிலாவது சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

விண்ணப்பங்கள் பொது முகாமையாளர், இலங்கை அரசினர் புகையிரதப் பகுதி, மருதானை, கொழும்பு—10 என்னும் முகவரியிற் பெறக்கூடியதாகவுள்ள விண்ணப்பப் படிவங்களில் நிரப்பப்பட்டு 19.10.1973 ல் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக மேற்கூறப்பட்ட முகாமையாளரின் முகவரிக்கு அனுப்பப்படுதல் வேண்டும். இத்தினத்திற்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் யாவும் நிராகரிக்கப்படும். விண்ணப்பப்படிவங்களுக்காகிய **கோரிக்கைகள்** யாவும் முத்திரை இடப்படாததும், சொந்த முகவரியிடப்பட்டதுமான ஒரு கடிதவுறை (9."×4") யுடன் சேர்த்து அனுப்பப்படுதல் வேண்டும். இத்தகைய கோரிக்கைகளைக் கொண்டிருக்கும் கடிதவுறையின் இடதுபக்க மேல் மூலையில் "புகையிரத முகவர் (போக்குவரவு) அக்போபுர பதவிக்காகிய விண்ணப்பம்" எனத் **தெளிவாகக் குறிக்கப்பட்டிருத்தல் வேண்டும்.**

மேலும் தேவைப்பட்ட விபரங்களைக் கூறப்பட்ட பொது முகாமையாளரது அலுவலகத்திலோ அல்லது அப் பிரதேசத்திலுள்ள பொது நிறுவனங்களிற் காணப்படும் அறிவித்தல்கள் மூலமாகவோ பெற்றுக்கொள்ளலாம்.

வி. ரி. நவறட்ன,
பொது முகாமையாளர்,
இலங்கை அரசினர் புகையிரதப் பகுதி.

10-107—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

---

## இலங்கை சுகாதாரத் திணைக்களம்

கற்குநிலைத் தாதிமார்களைத் திரட்டுதல்—1973

28.9.73 ஆம் திகதி அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் பந்தி 2 (ii) பின்வருமாறு திருத்தப்பட்டுள்ளது :—

**வயதெல்லை :** 27.10.1973 இல் 18 வயதுக்கும் 27 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

சுகாதாரசேவைப் பணிப்பாளர் அலுவலகம்,
கொழும்பு,
1973 ஒக்ரோபர் 5.

ஜி. அமரசேன,
பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்),
சுகாதாரசேவைப் பணிப்பாளருக்காக.

10-217—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

---

## இலங்கைப் பத்திரிகைப் பேரவை

தட்டெழுத்தாளர்/எழுதுநர் (ஆங்கிலம்) பதவி

இலங்கைப் பத்திரிகைப் பேரவையில் பின்வரும் பதவிக்கான விண்ணப்பம் கோரப்படுகின்றது :—

விண்ணப்பம், இவ்வறிவித்தலுடன் இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் நிரப்பப்பட்டு, "பத்திரிகை ஆணையாளர், இலங்கைப் பத்திரிகைப் பேரவை, தகவல், ஒலிபரப்பு அமைச்சு, 7, சேர் பாரன் ஜயதிலக மாவத்தை, கொழும்பு" எனும் முகவரிக்கு 20.10.73 ஆந் தேதியன்று அல்லது அதற்கு முன்னராக பதிவு அஞ்சல்மூலம் அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பம் வைத்து அனுப்பப்படும் கடித உறையின் இடது பக்க மூலையில் "தட்டெழுத்தாளர்/எழுதுநர் (ஆங்கிலம்) பதவிக்கான விண்ணப்பம்" எனத் தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

விண்ணப்பங்கள் பெறப்பட்டமை அறிவிக்கப்படமாட்டாது.

பதவி நிரந்தரமானது. நியமனம் பெறுபவர் மூன்று வருட காலத்திற்குப் பரீட்சார்த்த நிலையில் பணிபுரிவர். அவர்கள் ஊழியர் ஏற்பாட்டு நிதியத்துக்கு உதவுதொகை கொடுப்பனவு செய்வர்.

விண்ணப்பிக்கும் பதவிக்கென விதிக்கப்பட்ட தகைமைகளுக்குச் சான்றாக விண்ணப்பதாரர் சான்றிதழ்களின் பிரதிகளைச் சமர்ப்பிக்க வேண்டும். பின்வரும் சான்றிதழ்களின் பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும்.

(1) பிறப்புச் சான்றிதழ்.

(2) அதி உயர் கல்வித் தகைமைகளின் சான்றிதழ்.

(3) அண்மையில் பெற்ற குணச் சான்றிதழ்கள் மூன்று.
(அரசசேவைகளில் பணிபுரியும் விண்ணப்பதாரர் குணச் சான்றிதழ்களைச் சமர்ப்பிக்க வேண்டியதில்லை. ஆனால், அவ்விண்ணப்பங்கள் திணைக்களத் தலைவர்களூடாக அவர்களின் விதப்புரையுடன் அனுப்பப்படல் வேண்டும்).

இவ்வர்த்தமானியில் பகுதி I, தொகுதி (IIஅ) முற்பகுதியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசசேவையில் பதவிகளுக்கான நியமனங்களுக்கு ஏற்புடைத்தான பொது நிபந்தனைகளைப் பார்க்க.

**பத்திரிகை ஆணையாளர்.**

தகவல், ஒலிபரப்பு அமைச்சு,
7, சேர் பாரன் ஜயதிலக மாவத்தை,
கொழும்பு 1,
செத்தெம்பர் 24, 1973.

**பதவிப் பெயர்.**—தட்டெழுத்தாளர்/எழுதுநர் (ஆங்கிலம்)

**பதவிகளின் எண்ணிக்கை.**—ஒன்று

**சம்பள அளவுத்திட்டம்.**—மாதமொன்றுக்கு ரூபா 265—16×10—ரூபா 425. மாதமொன்றுக்கு ரூபா 295/- சம்பள அளவிற்கு முன்னர் வினைத் திறமைகாண் தடை உண்டு.

**வயது.**—30.09.73 இல் 18—30 வருடங்கள். (அரச சேவையில் அல்லது அரச கூட்டுத்தாபன மொன்றில் பணிபுரிவோருக்கு மேல் வயதெல்லைக் கட்டுப்பாடு ஏற்புடையதன்று).

**தகைமைகள்.**—க. பொ. த. (சாதாரண தரம்) பரீட்சையில் ஒரே தடவையில் இரண்டு திறமைச் சித்திகளுட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். திறமைச் சித்திகளில் ஒன்று ஆங்கில மொழியில் பெற்றிருக்க வேண்டும் ;

அல்லது

ஆங்கில மொழியில் திறமைச் சித்தி உட்பட இரண்டு பாடங்களில் திறமைச் சித்தியுடன் சி. பா. த. ப பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையொன்றில் சித்திபெற்றிருத்தல் வேண்டும்.

அபேட்சகர்கள் ஆங்கிலத்தில் நிமிடமொன்றுக்கு 35 சொற்கள் வீதம் தட்டெழுத்துப் பொறிக்கக்கூடிய தகைமை கொண்டிருக்க வேண்டும் ;

அல்லது

வர்த்தக நிறுவனங்களில் 3 வருடங்களுக்குக் குறையாது பணிபுரிந்துள்ள தட்டெழுத்தாளர்கள் (ஆங்கிலம்)

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

இலங்கைப் பத்திரிகைப் பேரவையில் தட்டெழுத்தாளர்/எழுதுநர் (ஆங்கிலம்) பதவிக்கான விண்ணப்பம்

1. விண்ணப்பதாரரின் பெயர் :
   (1) முதற் பெயர் : திரு./திருமதி/செல்வி :———.
   (2) இதர பெயர்கள் :———.
2. அஞ்சல் முகவரி :———.
3. வயது :
   (1) 30.09.73 இல் வயது :———.
   (2) பிறந்த தேதி (பிறப்புச் சான்றிதழ் பிரதி இணைக்கப்படவேண்டும்) :———.
4. தேசிய இனம் :———.
5. திருமணமானவரா, திருமணமாகாதவரா :———.
6. கல்வித்தகைமைகள் அல்லது தொழில்நுட்பத் தகைமைகள் அல்லது இரண்டும் :———.
7. பாடசாலையிலிருந்து விலகியது தொட்டு ஆற்றிய தொழில் அல்லது பின்பற்றிய பயிற்சி நெறிகள் அல்லது இவ்விரண்டினதும் பற்றிய விபரங்கள் :———.
8. அரசின் கீழ் அல்லது அரச கூட்டுத்தாபனமொன்றின் கீழ் முன்னர் சேவையாற்றியிருந்தால், அச்சேவையிலிருந்து விலகியதற்கான காரணங்களைத் தருக :———.
9. குற்றமெதற்காகவேனும், சட்ட நீதிமன்றமொன்றினால் குற்றவாளியாகக் காணப்பட்டிருந்தால், குற்றத்தின் தன்மை, விதிக்கப்பட்ட தண்டனை பற்றிய விபரங்களைத் தருக :———.
10. குணச்சான்றிதழ்கள் வழங்கியோரது பெயர்கள், முகவரிகள், பதவிப் பெயர்கள் என்பவற்றைத் தருக :———.

இந்த விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவையெனவும் சரியானவையெனவும் நான் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இதிலடங்கியுள்ள விபரங்கள் ஏவையேனும் பிழையானவையென அல்லது தவறானவையெனக் காணப்படுமிடத்து, அத்தகைய கண்டுபிடிப்பு தேர்வுக்கு முன்னரெனில் தகைமை இழப்பதற்கும், நியமனத்திற்குப் பின்னரெனில் பதவி நீக்கத்திற்கும் ஆளாவேன் என்பதையும் நான் அறிவேன்.

———,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

தேதி :———.

10-230—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

எனது இல. 1/60/26 (ஜி)

**தட்டெழுத்தாளர் சேவையின் (சிங்களம்) பொதுத் தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்காக 1973, சனவரியில் நடத்தப்பட்ட பரீட்சையின் பெறுபேறுகள்**

தட்டெழுத்தாளர் சேவையின் பொதுத்தரத்திற்கு ஆட்சேர்ப்பதற்கு நடாத்தப்பட்ட மேற்கூறிய பரீட்சையின் பெறுபேறுகளின்படி கீழே கூறப்படும் பரீட்சார்த்திகள் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்கள் என இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

| பெயர் | முகவரி |
|---|---|
| ஜி. எச். டீ. பியசீலி .. | .. 181, டொடங்கொட், கிளிமெல்லகஹ, பத்தேகம |
| டி. டபிள்யு. ஆரியரட்ன அமரசேன .. | .. "ஜன்வாச", வடுவா, கொணபினுவலா |
| எச். எஸ். சி. திலகரட்ன .. | .. டீ சொய்சா மாடி, மொரட்டுவா |
| பி. ஏ. என். டீ சில்வா .. | .. சுலீலிதா வர்த்தகப் பாடசாலை, புதுவீதி, அம்பலாங்கொடை |
| டபிள்யு. எம். டபிள்யு. சந்திரசிறீ .. | .. 166ஏ, வெலிவிற்ற சந்தி, மாலம்பே |
| ஜீ. விமலாவதி .. | .. 34/2, பத்தேகம வீதி, கிரிகண்டிகொட, ஹிக்கடுவ |
| ஏ. கே. ஜெயசிங்க .. | .. 97, ஹடிகம, பிலியந்தல |
| எச். ஏ. சமரசிங்க .. | .. தாலுவால்ன, வாகரக்க |
| என். எம். ரிகிரி குமாரிகாமி .. | .. கனேகப்பொல, உருமியா |
| கே. ஜி. சுமனச்சந்திரா .. | .. 54, இராகுல குறுக்கு வீதி, டெல்கட, மாத்தறை |
| பி. ஆர். பெரேரா .. | .. 690, தாலங்கம தெற்கு, தாலங்கம |
| ஆர். ஏ. எல். ரூபசிங்க .. | .. எஸ்வத்தை (தெற்கு), பூவக்பிட்டிய |
| எச். கே. ஆதர் .. | .. பரகசமெடித்த, கடுருவவ்லா, நாரங்கொட |
| ஐ. ஏடொன் நோனா .. | .. "கோமவாசா", மெடகொட, கம்புருகமுவா |
| கே. சந்திரவதி .. | .. 342, டெடிகமுவா, ருனலா |
| டபிள்யு. ஏ. சோமரட்ன .. | .. மகுல்ககருப்ப, பலபத்வெல, மாத்தளை |
| டி. எஸ். டி. சில்வா .. | .. "சுல்லிதா" வர்த்தகக் கல்லூரி, புதுவீதி, அம்பலாங்கொடை |
| ஏ. எம். பீ. பீரிஸ் .. | .. சன்விமல் பார, டெல்தரா, பிலியந்தலை |
| டி. டி. அசோக நாளினி .. | .. குருநாகல் வீதி, அம்பேபுச, வரக்கப்பொல |
| சி. பி. எம். பெர்னாந்து .. | .. 7, மெனெரிகம பிளேஸ், மௌண்ட் லவனியா |
| டி. டி. என். எம். விக்கிரமரட்ன .. | .. "விக்கும்", இரத்தினபுரி வீதி, அவிசாவலை |
| எச். ஆர். முனசிங்க .. | .. "சத்சிறி", 84, களுத்துறை வீதி, மத்துகமம் |
| எல். டி. குலதுங்க .. | .. விளையாட்டு பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு, ரொறிங்டன் சதுக்கம், கொழும்பு 7 |
| ரி. டபிள்யு. பிறேம பத்மினி .. | .. 35, துடுவேமுல்ல, அம்பலாங்கொடை |
| டபிள்யு. ஏ. பிரேம லதா .. | .. 125, தர்மசாலாவ அவெனியூ, ஒபயசேகரபுர, இராஜகிரிய |
| பி. கே. ஜாகொட .. | .. "சேனசும", ஆஸ்பத்திரி பிளேஸ், பத்தேகம |
| எம். சி. விக்கிரமரட்ன .. | .. 50, "சேனுனி" சிற ஆரியவிலாச றோட், கொரணை |
| எம். டி. சோமவதி .. | .. 159, இகலகம, கம்பஹா |
| எச். ஆர். டி. பி. குணதிலக .. | .. சிறிசரலங்கார அவெனியூ, கின்டெல்பிட்டிய, வெல்மில்ல சந்தி |
| ஐ. எம். பி. சிறிவர்த்தன .. | .. கொரடுவ, பென்தோட்டை |
| யூ. எச். லீலாவதி .. | .. 290/1, கொதட்டுவா, அங்கொடை |
| எச். யூ. லொகுமெனிக் .. | .. உடகெதர, காவத்த, பன்விலத்தென்ன |
| கே. டபிள்யு. பத்மசேபாலி சில்வா .. | .. சுல்லிதா வர்த்தகக் கல்லூரி, புதுவீதி, அம்பலாங்கொடை |
| டி. பி. எல். பியசீலி .. | .. ஏகொடகொட, ஹிக்கடுவ |
| எச். ஜி. பெர்னாந்து .. | .. மிசன் வீடு, கெகெல்வத்தை, பாணந்துறை |
| ஏ. எல். அமராங்கனி .. | .. "லாகிரு", ரம்புக்கெட்டியா, நாகுலுக்முவா |
| ஆர். எஸ். ரட்னயக்க .. | .. தேசிய அரசுப் பேரவை, கொழும்பு 1 |
| பி. கே. ஏ. பஸ்குவால் .. | .. தொகை மதிப்புப் புள்ளிவிவரத் திணைக்களம், கொழும்பு 1 |
| ஜி. ரி. சி. ரூபெரு .. | .. 87/4, யூ. சீ. "சிறியானி", தந்திரிமுல்லா, பாணந்துறை |
| கே. ஆரியரட்ன .. | .. உள்நாட்டு இறைவரித் திணைக்களம், பதிவேட்டு அறை, கொழும்பு 1 |
| பி. ஏ. கருணாரட்ன .. | .. 16/4, மொரக்குண றோட், கெள்தான, தெகிவளை |
| எல். ஞானவதி .. | .. "சிறிசெவன", முனமல்பே, தெனிப்பிட்டிய |

| பெயர் | முகவரி |
|---|---|
| எம். ஏ. வசந்தா | 78, இராகுல ரோட், அங்கொடை |
| ஆர். என். சோமரட்ன | பேர்ககாவத்தை, கிரிண்டிவெல |
| ஜி. டபிள்யு. சுமனவதி | சுல்லிதா வர்த்தகப் பாடசாலை, புதுவீதி, அம்பலாங்கொடை |
| கே. டபிள்யு. கேமலதா | " சந்ததில்க ", டொடங்ககவில்ல, கொனபினுவிலா |
| பி. எல். சோமசிறி | 73, சுற்று வீதி, காலி |
| பி. ஜெயசீலி | 80, மில்லாவ |
| ஆர். ரி. திலகலத்தா | எல்லா ரோட்டு, எல்பிட்டியா |
| கே. டி. சுமனசேன | கீனடுவா அகங்கமா |
| எம். எச். ரமணி | ஸுலலித வர்த்தகக் கல்லூரி, புதுரோட், அம்பலாங்கொடை |
| ஜி. சி. திலகசேகர | " திலக் ", நிந்தன |
| எஸ். பி. தயாவதி | யோகமா, தெஹியோவிட்ட |
| ஜி. எம். ஞானவதி | பெலும்மஹார, டேகத்தன |
| டி. எம். என். ரட்நாயக்க | 43, பீ. ரட்ன்நிவாச, அங்கொடை |
| எல். ஏ. பத்மினி | பத்தடுவா, பத்தபொல |
| எஸ். டீ. ஏ. டிசநாயக்க | 355, ஆற்று வீதி, வெரகெர, பொரல்ஸ்கமுவ |
| எஸ். பீ. வீரக்கொடி | சுல்லிதா வர்த்தகக் கல்லூரி, புது ரோட், அம்பலாங்கொடை |
| எச். பீ. ஏ. சி. ரணசிங்க | மடித்தியவலா, பண்டுரகொட |
| வி. எம். சோமலதா | லோறென்ஸ் வர்த்தகக் கல்லூரி, பத்தரமுல்ல, தாலங்கம |
| ஜி. ஜி. லலாணி | பதுவத, தொடன்டுவ |
| கே. பீ. தயாவதி | 146, பிரமானகம, கிரிப்பிட்டியா, பனிப்பிட்டியா |
| ரி. டி. சேர்மசிறிமால் | " சிறிமால் ", ஜல்தார, கன்வெல |
| ஆர். வீரசிங்கி | " வீரகிரி ", டிக்கும்புர, அகங்கம |
| பி. எச். பீ. டி சில்வா | மே./பா., பி. எச். சாளிஸ் சில்வா, ககட்டபிட்டியா |
| எச். சோமாவதி பீரிஸ் | " சுமுது ", கிரான, பாணந்துறை |
| ஜி. திலகலதா | " சுல்லிதா ", வர்த்தகக் கல்லூரி, புது ரோட், அம்பலாங்கொடை |
| எம். எம். நீதா | 53, " சிசிரா ", கொட்டாவ ரோட், மிரிஸ்வத்தா, பிலியந்தலா |
| எச். குசுமாவதி | 70/1, நீர்கொழும்பு ரோட், குருநாகல் |
| எம். கே. சமரக்கூன் | ஆட்பதிவுத் திணைக்களம், கெப்பிட்டிபோல ரோட், கொழும்பு 5 |
| ஓ. எம். கீதாஞ்சலி ஜெயரட்ன | " கம்பதி நிவாச ", அத்திலிகொட, காலி |
| என். கே. டி. சிறிபால | மெடபல்கெட்டிய, டெனிபிட்டிய |
| எச். டி. நந்தாவதி பெரேரா | 50/10, மொரன்துடுவ ரோட், வட்டுவா |
| என். சி. பியசீலி | " துயவாச ", குருகொடெல்லா, அலுத்வல |
| ரி. தர்மரட்ன | " லும்பினி " வல்போல, பத்துவத்த, ருக்ம |
| பி. லக்ஷ்மன் திலகரட்ன | 145, கோரசே, உடுகம்பொல |
| எல். பீ. பொர்ணுந்து | ஆட்பதிவுத் திணைக்களம், சி. 45, கெப்பிட்டிபொல ரோட், கொழும்பு 5 |
| கே. பத்மினி | வக-இறிதில்பொல, துமோதர |
| கே. ஏ. சி. எல். பெரேரா | பத்தரக் கெயயவத்த, பத்தபோல |
| சி. ஜெ. நாணயக்கார | மாவெல்லவத்த, பொரவலா, வெலிகம |
| எஸ். ஏ. தர்மசேன | 88/1, கெஸ்பேவ ரோட், நுகேகொடை |
| ஆர். டபிள்யு. எம். ஏ. ராஜபக்ஸ | டம்பகொல்லகெதர, பன்னலவெல, லுனுவத்த |
| பி. டி. எல். டீ. சில்வா | சுல்லிதா வர்த்தகப் பாடசாலை, புதிய ரோட், அம்பலாங்கொடை |
| ஏ. பீ. தாபரே | இல. 538, பிட்டிபத்தன தெற்கு, கோமகம |
| ஆர். எல். ரூபாங்கனி | லோறென்ஸ் வர்த்தகப் பாடசாலை, பத்தரமுல்ல, தாலங்கம |
| எம். எஸ். மலவென்ன | இல. 1, வெவல்வல ரோட், வட்டகன்வில, காலி |
| ஏ. கமலாவதி | கிஸ்வெல்ல, கிரின்டிவெல |
| என். டபிள்யு. கரிஸ்சந்திர சில்வா | சுல்லிதா வர்த்தகப் பாடசாலை, புதுரோட், அம்பலாங்கொடை |
| எம். எல். எம். பெரேரா | இல. 148, அழகேஸ்வர ரோட், எத்துல் கோட்டை, கோட்டே |
| பீ. ஏ. சோமவதி | ஆயுள்வேதத் திணைக்களம், கொழும்பு 8 |
| ஆர். எம். எச். பி. ரட்ணயக்க | " கம்பதி நிவாச ", முதுன்ன, உகுமியா |
| டபிள்யு. ஏ. பிரேமரட்ன | எவிலன ரோட், மில்லேவ, கோரளை |
| டபிள்யு. கே. நோர்மன் | கமநலச் சேவைகள் அலுவலகம், அநுராதபுரம் |
| ஆர். ஏ. ரோகனி ரூபவதி | மாவல்விகம, கல்பருவா, வாகா |
| சி. ஜி. எச். சந்திரவதி | மன்வெரிய, ராஜகடலுவ |
| ஆர். எம். குலும்புரே | மே./பா., ஜெ. டி. எல். பியதாச, வீலேகொட |
| எச். ஆர். ரன்மெனிக | " மாலினி ", அஸ்மதல, கலத்தார |
| எம். பத்மினி ரட்னசிரி | " சாந்தி ", கொடகம, தெல்வத்த |
| டி. ஆர். ரம்பண்டார | பனகமுவ, அத்தனகொட, பொலகொட |
| ஜி. எச். கருணவதி டீ சில்வா | சுல்லிதா வர்த்தகப் பாடசாலை, புதுவீதி, அம்பலாங்கொடை |
| ஆர். ஏ. டி. சி. ஜெயவர்த்தன | " நிசல ", 5 ஆம் குறுக்குத் தெரு, வெரகம்பிட்டிய, மாத்தறை |
| டபிள்யு. சிறியாவதி | மே/பா. சேர்மா பேக்கரி கருலான, பேவே, பாதுக்க |
| டி. ஜெ. கே. ஜயசூரிய | தக்வற் திணைக்களம், த.பெ. 1416, கொழும்பு 1 |
| எம். ஏ. பீ. பி. பெரேரா | 7/3ஏ., நூல்நிலைய வீதி, சிலாபம் |
| எச். எல். ஏ. டி சில்வா | அக்குரஸ்ஸ ரோட், கித்தாட்டிய, மாத்தறை |
| ஆர். ஏ. புஸ்பா சந்திரலதா | அரச ரப்பர் தொழிற்சாலை, பாதுக்க |
| எஸ். பி. பியசீலி | மில்லா—கிக்கடுவா |
| என். சோமவதி | குரன தெற்கு, கந்தபன்கொட |
| ஜி. என். டயஸ் | 75/5, 3 ஆம் அவெனியூ, அலுத்வத்தை, சிலாபம் |
| டபிள்யு. பீ. மாலினி | அத்தனகல, உரப்போல |
| டபிள்யு. டி. பேமாவதி | குருந்துவத்தை, தியகம, கிரிவத்துடுவ |
| எம். டி. திரிமவிதான | ககவெலித்தனகெதர, பொரலுகொட, பத்தேகம |
| எச். கே. குணவதி | எல்லந்துடுவே, கடவெட்டுவ, யத்தியான, மாத்தறை |
| பி. ஜி. ரஞ்சனி | 81/1, அகரகம ரோட், பதுளை |
| ஜெ. எஸ். வரசுவிதானே | " ஜெயந்தி ", நெல்டுவ ரோட், மகா அம்பலாங்கொட, அம்பலாங்கொட |
| டபிள்யு. டி. லலானி மங்கலியா | " குணசேவன ", 149/1, அளுத்கம ரோட், மத்துகம |
| எம். சைமன் பெரேரா | குடகமன, கொத்ததெனியாவ |

| பெயர் | முகவரி |
|---|---|
| பி. எம். ஜெ. எஸ். கூரே .. .. | " லெக்ஸ் ஆன் ", காமுல்ல, களுத்துறை |
| பி. மாலினி டி சில்வா .. .. | சுல்லிதா வர்த்தகப் பாடசாலே, புது ரோட், அம்பலாங்கொடை |
| டபிள்யு. ஏ. சுபசிங்க .. .. | 517, திம்பிரிகஸ்யாய ரோட், கொழும்பு 5 |
| வை. சி. குசுமாவதி .. .. | மொரககவெல, கெவடிவெல, ரம்புக்கனை |
| டி. எல். எம். பொன்னுந்து .. .. | 67, தேவாலய ரோட், தருகம, ஜா–எல |
| பி. டபிள்யு. குணசேகர .. .. | அநுராலியகவத்த, வல்கம தெற்கு, மாத்தறை |
| எஸ். ஆர். டி. வை. அபேகுணவர்த்தன .. | மே./பா., கே. வி. சிரில், எத்தனமடல, களுத்துறை வடக்கு |
| கே. டி. அல்பேட் .. .. | 205, சீமெற்றி ரோட், பாலவத்தை, பன்னிப்பிற்றியா |
| கே. ஏ. டி. கே. நாணயக்கார .. .. | " சிஙிரி ", குளியாப்பிட்டிய |
| எம். டபிள்யு. சுவர்ணலதா .. .. | 42, சிறி தம்மிகார அவெனியு, தொடன்டுவா |
| பி. எம். பொன்னுந்து .. .. | 127, குடா வட்டுவா, வட்டுவா |
| எச். எல். சந்திரவதி .. .. | " பிறின்ஸ் " வித்தியாலயம், பின்கண்ட, டொடன்டுவ |
| எம். திலகரட்ன .. .. | பிரஜாபதி பாலர் வீடு, பாணந்துறை. |

அரசாங்க நிருவாகத் திணைக்களம் இணைந்த சேவைகள் பகுதி,
ரொரிங்டன் சதுக்கம், கொழும்பு 7,
1973 ம் ஆண்டு செப்தெம்பர் மீ 24 ந் உ.

ஆர். எம். பீ. சேனநாயக்க,
அரசாங்க நிருவாகப் பணிப்பாளர் அதிபதிக்காக.

10–50—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 30

---

### இலங்கை கடல்கடந்த சேவைக்கு ஆட்சேர்ப்புக்கான யாவர்க்குமுரிய போட்டிப் பரீட்சை, 1973

மேற்போந்த பரீட்சை தொடர்பாக 1973, செத்தெம்பர் 14 ஆம் திகதிய 77 ஆம் எண்கொண்ட இலங்கைக் குடியரசு கசெற்றில் தோற்றும் அறிவித்தலானது பின்வரும் அறிவித்தலால் திருத்தப் படுகின்றது.

14.09.73 ஆந் திகதிய அறிவித்தலுக்குப் பதிலளிக்கும்முகமாக ஏலவே விண்ணப்பித்துள்ள பரீட்சார்த்திகள், திருத்தப்பெற்ற இவ் வறிவித்தலின்கீழ் மீள விண்ணப்பிக்கவேண்டியதில்லை.

1973, செத்தெம்பர் 14 ஆம் திகதிய கசெற்றில் தமிழில் வெளி யான அறிவித்தலுக்குப் பதிலளிக்கும்வகையில் விண்ணப்பித்த அரசுச் சேவை, உள்ளூராட்சிச் சேவை, அரசு யாக்கங்கள் ஆகிய வற்றிலுள்ளோரும் 1973, செத்தெம்பர் 14 ஆம் திகதியன்று முப் பத்தைந்து (35) வயதை எய்தியுள்ளோருமான நிரந்தர ஊழியர் களால் இறுக்கப்பட்ட பரீட்சைக் கட்டணமானது மீளளிக்கப் படும்.

வி. ரி. ஜயசிங்ஹ,
செயலாளர்.

பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள்
அமைச்சு,
கொழும்பு—1, 1973, செத்தெம்பர் 29.

#### ஒழுங்குவிதிகள்

**பரீட்சைத் திகதி.**—இலங்கைக் கடல்கடந்த சேவை ஆட்சேர்ப் புப் பரீட்சையொன்று, பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் சார்பில் பரீட்சை ஆணையாளரினுற் கொழும்பில் நடாத்தப்பெறும்.

இப்பரீட்சை இரு பகுதிகளாக நடாத்தப்பெறும். பகுதி I, ஆனது (அ) வியாசம், (ஆ) பொது அறிவு, (இ) உலக அலுவல் கள், (ஈ) ஆங்கில மொழி ஆகியவற்றைப்பற்றி ஒவ்வொரு வினுத் தாளைக் கொண்டதாக இருப்பதோடு, 1973, நவெம்பர் 3 ஆம் திகதி தொடக்கம் நடைபெறும். பரீட்சைத் திகதியில் மாற்றம் ஏதும் ஏற்பட நேரின், அது பின்னர் அறிவிக்கப்படும்.

நேர்முக சோதனையொன்றைக் கொண்ட II ஆம் பகுதியா னது, I ஆம் பகுதியின் பெறுபேறுகள் கிடைக்கப்பாலனவாகிய பின்பு நடாத்தப்பெறும். பகுதி I இன் ஒவ்வொரு பாடத்திலும் போதிய அளவு உயர் மட்டத்திற் புள்ளிகள் ஈட்டும் அபேட்சகர் களுக்கு மட்டுமே நேர்முகச் சோதனைக்கான திகதிகள் அறிவிக் கப்படும். II ஆம் பகுதிக்கு, அதாவது நேர்முகச் சோதனைக்கு, அழைக்கப்பெற அருகதையாகும்பொருட்டு அபேட்சகர்கள் ஈட்ட வேண்டிய புள்ளிகளின் ஆகக்குறைந்த மட்டமானது, உள்ள வெற்றிடங்களைப்போல ஏறத்தாழ இருமடங்கு எண்ணிக்கையின ரான அபேட்சகர்கள் நேர்முகச் சோதனைக்கு அழைக்கப்பெறு தற்கு வசதியேற்படுத்தும் அத்தகைய நூற்றுவீதத் தளத்தில் இருக்கும்வண்ணம் நிருணயிக்கப்படும்.

பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சானது, அவ்வாறு செய்தல் அவசியமானது அல்லது உசிதமானது எனக் கருதின், இப்பரீட்சையை நடத்தாதுவிடும் அல்லது காலந்தாழ்த்தும் உரிமையைத் தன்மாட்டுக் கொண்டுள்ளது.

2. **வெற்றிடங்களின் எண்ணிக்கை.**—இப்பரீட்சையின் பெறு பேறுகளின் பேரில் நிரப்பப்பட வேண்டிய இலங்கைக் கடல் கடந்த சேவையிலுள்ள வெற்றிடங்களின் எண்ணிக்கையும் அத்த கைய வெற்றிடங்களை நிரப்பும் திகதியும் பாதுகாப்பு, வெளிநாட் டலுவல்கள் அமைச்சினுல் நிருணயிக்கப்படும். பொதுமக்களின் நலனையிட்டு இவ்வெற்றிடங்களுள் எதனையோ எல்லாவற்றை யுமோ நிரப்பாதுவிடுதல் அவசியமெனப் பாதுகாப்பு, வெளிநாட் டலுவல்கள் அமைச்சு கருதினுல், அவ்வாறு நிரப்பாதுவிடும் உரி மையை அவ்வமைச்சு தன்மாட்டுக்கொண்டுளது.

3. **சேவை நிபந்தனைகள்.**—மேற்போந்த 2 ஆம் பந்தியின் ஏற் பாட்டுக்கமைய இப்பரீட்சைப் பெறுபேறுகளின்பேரில் தெரிவு செய்யப்பெறும் பரீட்சார்த்திகள், அரச சேவைகளில் நியமனங் களைக் கட்டுப்படுத்தும் பொது நிபந்தனைகளுக்கும் இலங்கைக் கடல்கடந்த சேவைப் பிரமாணக்குறிப்பில் எடுத்துக்காட்டப் பெற்ற நியதிகள், நிபந்தனைகளுக்கு இயையவும், அப்பிரமாணக் குறிப்புக்குச் செய்யப்பட்டிருக்கும் அல்லது இனிமேல் செய்யப் படும் எத்திருத்தங்களுக்கும் அமையவும் இலங்கைக் கடல்கடந்த சேவையில் தகுதிகாண் நிலையினராக நியமிக்கப்பெறுவர்.

இப்பரீட்சையின் பெறுபேறுகளின்பேரில் தெரிவுசெய்யப்பெறும் பரீட்சார்த்திகள், இலங்கைக் கடல்கடந்த சேவைக்கு நியமிக்கப் பெற நேரடுத்து முன் அரச சேவையில் அல்லது உள்ளூராட்சிச் சேவையில் இளைப்பாற்றிச் சம்பளத்திற்கு உரித்துடைய நியமனங் கள் வகித்திருந்தாலல்லாது—அத்தகைய சந்தர்ப்பத்தில் இலங் கைக் கடல்கடந்த சேவையிலான அவர்களது நியமனங்கள் இளைப்பாற்றிச் சம்பள அடிப்படையிலாகவிருக்கும்—இலங்கைக் கடல்கடந்த சேவைக்குச் சேமலாப நிதி அடிப்படையில் நியமிக் கப்பெறுவர்.

இலங்கைக் கடல்கடந்த சேவைக்கு நியமிக்கப்பெறுதற்கு நேர டுத்து முன்பு, ஏலவே விதவைகள், அனுதைகள் இளைப்பாற்றிச் சம்பள நிதிக்குப் பங்குத்தொகையிறுப்போராக இருப்பினன்றி, இப்பரீட்சையின் பெறுபேறுகளின்பேரில் இலங்கைக் கடல்கடந்த சேவைக்கு நியமிக்கப்பெறும் பரீட்சார்த்திகளுக்கு வி. அ. இ. நிதித்திட்டம் ஏற்புடையதாகாது.

4. **தகவுத்திறன்.**—இப்பரீட்சைக்குரிய பரீட்சார்த்திகள்—

(அ) வம்சாவழி அல்லது பதிவு இலங்கைப் பிரசைகளாகவும்;

(ஆ) நன்குமதிக்கப்பெற்ற ஒரு பல்கலைக்கழகப் பட்டம் பெற் றுள்ளோராகவும் (நேர்முகப் பரீட்சைக்கு முன்னர் பரீட்சார்த்திகள் தத்தமது சான்றிதழ்களைக் காண பிக்குமாறு வேண்டப்படுவர்);

(இ) 1973.09.14 ல் இருபத்திரண்டு (22) வயதை எய்தியுள் ளோராகவும் முப்பது (30) வயதை எய்தியிராதோராக வும்; அத்துடன்,

குறிப்பு :—(i) அரச சேவை, உள்ளூராட்சிச்சேவை, அரசயாக் கங்கள் ஆகியவற்றில் நிரந்தர ஊழியராகவுள் ளோர்க்கு முப்பது (30) ஆண்டுகளின்தான இவ் வயது மேலெல்லை ஏற்புடைத்தாகாது. எவ்வாறு யிருப்பினும், 1973.09.14 அன்று இவ்வூழியர்கள் முப்பத்தைந்து (35) வயதை எய்தியுள்ளோ ராக இருத்தலாகாது.

(ii) (உள்ளூராட்சிச் சேவை ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்டோர் தவிர்ந்த பிற) உள்ளூராட்சி அதிகாரசபைகளின் ஊழியர்கள் ; வங்கிகள், கடன் ஈயும் நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றின் ஊழியர்கள் ; குழுமங்கள், யாக்கங்கள், அரசின் உடைமை முழுமையுமில்லா நிறுவனங்கள், முதலாயினவற்றின் ஊழியர்களானோர் இதன்மேற் குறிப்பு (i) இல் தொடர்புறுத்தப்பட்ட வயதுச் சலுகைக்கு அருகதையுடையராகார்.

(ஈ) அரச சேவை, உள்ளூராட்சிச் சேவை, அரச யாக்கங்கள், அல்லது சபைகள் ஆதியவற்றில் உள்ளோராயின், ஒரு திருப்திகரமான சேவைக்காலவெல்லையை உடையோராகவும்

இருத்தல் வேண்டும்.

1973.09.14 உக்கு நேரடுத்து முற்பட்ட ஐந்து (5) ஆண்டு சேவைக்காலத்தின்போது, அல்லது 1973.09.14 உக்கு நேரடுத்து முற்பட்ட சேவையின் மொத்தக் காலவெல்லை ஐந்து (5) ஆண்டுகளுக்குக் குறைந்ததாக இருக்குமிடத்து அத்தகைய குறைவான சேவைக்காலவெல்லையின்போது ஒரு திருப்திகரமான சேவைப் பதிவுச்சுவடியை உடையவராக இருந்திருப்பின்ன்றி, அரசுச் சேவைகள், உள்ளூராட்சிச் சேவை, அரச யாக்கங்கள், சபைகள் அல்லது அரசாங்கத்தின் பிற நிறுவனங்கள் ஆகியவற்றிலுள்ள அலுவலர் எவரும் இப்பரீட்சைக்குத் தோற்ற அருகதையுடையராகார். சம்பந்தப்பட்ட சேவைக் காலவெல்லையின்போது கிடைக்க வேண்டி இருந்தனவான சம்பள ஆண்டேற்றங்கள் யாவற்றையும் ஓர் ஆண்/பெண் அலுவலரானவர் பெற்றிருந்ததோடு, மேலும், அத்தகைய காலவெல்லையின்போது எச்சரிக்கைகள் புறநீங்கலான எவ்வுருவிலான ஒழுக்காற்று நடவடிக்கைக்காயினும் உட்படுத்தப்பட்டிராதவராக இருக்கும்பட்சத்தில் மாத்திரமே அவர் ஒரு திருப்திகரமான சேவைப் பதிவுச் சுவடியை உடையவராக இருந்துள்ளார் எனக் கணிக்கப்பெறுவார்.

1973.09.14 உக்கு நேரடுத்து முற்பட்ட ஐந்து (5) ஆண்டுகளுக்கு முன்னரான அலுவலர் ஒருவரின்து சேவைப் பதிவுச் சுவடியானது முற்றிலுந் திருப்திகரமாக இல்லாதிருந்துள்ளவிடத்து அவ்வலுவலர் இப்பரீட்சைக்குத் தோற்ற அருகதையுடையரெனினும் நேர்முகச் சோதனையிற் புள்ளிகள் அளிக்கப்பெறுகையில் அவராற் பெறப்பட்ட ஒழுக்காற்றுத் தண்டனை அத்துடன்/அல்லது அவருக்குக் கிடைக்கப்பெற்ற பாதகமான விமரிசனங்கள், கண்டனங்கள், எச்சரிக்கைகள் முதலாயின கணக்கில் எடுத்துக் கொள்ளப்படும்.

5. **பரீட்சைக்கான கட்டணம்.**—இப்பரீட்சைக்கான கட்டணம் வருமாறு :—

(அ) பகுதி I—எழுத்துருச் சோதனை—ரூ. 125 விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படற்கான இறுதித் திகதிக்கு முன்னர் இக் கட்டணம் ஆக அண்மிய கச்சேரிக்கு அல்லது கொழும்பு, பொதுத் திறைசேரியில் இறுக்கப்படுவதுடன் வருமானத் தலைப்பு 6, உப தலைப்பு 2, விடயம் 5-உக்கு வரவுவைக்கப்படுதலும் வேண்டும். கச்சேரி, அல்லது திறைசேரிப் பற்றுச்சீட்டு விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கப்பெறல் வேண்டும்.

(ஆ) பகுதி II—நேர்முகச் சோதனை—ரூ. 75 நேர்முகச் சோதனைக்குத் தகவீட்டும் அபேட்சகர்களானோர், இக்கட்டணம் எங்ஙனம் இறுக்கப்படல் வேண்டும் எனப் பின்னர் அறிவிக்கப்படுவர்.

**குறிப்பு.**—எவ்வகைத்தான காரணத்துக்காகவாயினும் பரீட்சைக்குச் சமுகமளியாதிருக்கும், அல்லது பரீட்சைக்குத் தோற்றியுள்ளாராயினும், தகவுத்திறனற்றவராகக் காணப்பெறும் ஆண்/பெண் பரீட்சார்த்தி எவரேனும் இக்கட்டணத்தின் முழுமையையும் அல்லது ஒரு பகுதியை மீளளிக்கப்பெற அருகதையுடையவராகார்.

6. **வைத்தியப் பரிசோதனை.**—பரீட்சார்த்திகள் உடல்நலமும் நற்பண்பும் தொடர்பாக தாம் உரிய தகைமயுடையோரெனப் பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சுக்கு உளநிறைவு ஏற்படுத்துவித்தல் வேண்டும். அவர்கள் காத்திரமான உடற்கட்டு, நல்ல கண்பார்வையும் உடையோராக இருப்பதோடு உலகின் எப்பாகத்திலேனும் சேவையாற்றற்கேற்ற உடற்றகுதி உடையோராகவும் இருத்தல் வேண்டும்.

தெரிவு செய்யப்பெறும் பரீட்சார்த்திகள் இந்த அம்சங்களையொட்டிய கண்டிப்பான வைத்தியப் பரிசோதனையொன்றுக்கு ஆளாகுமாறும் வேண்டப்படுவர்.

இவ்வைத்தியப் பரிசோதனைக்குப் பத்து ரூபா ஐம்பது சத (ரூ. 10.50ச) தொகையின்தான ஒரு கட்டணம் அறவிடப்படும். நியமனத்துக்குத் தெரிவு செய்யப்பெறும் பரீட்சார்த்திகள் இக் கட்டணம் இறுக்கப்பட வேண்டிய வகைபற்றிய அறிவித்தல் கொடுக்கப்பெறுவர்.

7. **விண்ணப்பிக்கும் முறை.**—

(அ) இதன்கீழ் இணைந்துள்ள படிவ உருவிலமைந்த தமது விண்ணப்பங்களை இருமடித்தாளின் ஓரரைத்தாளின்மீது விண்ணப்பதாரர்கள் சமர்ப்பித்தல் வேண்டும். காகிதத்தின் இருபுறமும் பயன்படுத்தப்படல் வேண்டும். விண்ணப்பதாரர் எம்மொழி ஊடகவாயிலாக இப்பரீட்சைக்குத் தோற்றுவாரோ அம்மொழியிலேயே விண்ணப்பப் படிவமும் நிரப்பப்படல் வேண்டும்.

(ஆ) இப்பரீட்சைக்கு அனுமதிக்கப்பெறற்கான நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் 1973 ஒற்ரோபர் மீ 13 ந் திகதி அன்று அல்லது அதற்கு முன்னர் பரீட்சை ஆணையாளர், அஞ்சல் அலுவலகப் பெட்டி, 1503, கொழும்பு 2, எனும் முகவரியை வந்தடையும் வண்ணம் பதிவஞ்சல் வாயிலாக அனுப்பி வைக்கப்படல்வேண்டும். அத்திகதிக்குப் பின்பு கிடைக்கப்பெறும் விண்ணப்பம் எதுவும் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்களானவை, அரசுச் சேவையிலுள்ளோரிடமிருந்தாயின் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர்களுக்கு ஊடாகவும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ளோரிடமிருந்தாயின் உள்ளூராட்சிச் சேவை ஆணைக்குழுவின் செயலாளருக்கு ஊடாகவும், அரசு யாக்கங்களின் ஊழியர்களிடமிருந்தாயின் அவ்வந்நிறுவனங்களின் தலைவர்களுக்கு ஊடாகவும் விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதிக்கு முன் பரீட்சை ஆணையாளரை வந்தடையும்வண்ணம் அனுப்பிவைக்கப்படல் வேண்டும். திணைக்களங்களினதும் பிற நிறுவனங்களினதும் தலைவர்களானோர் விண்ணப்பங்கள் எல்லா வகையிலும் நிறைவாக்கப்பட்டுள்ளமையைப்பற்றித் தத்தமக்கு உளநிறைவு ஏற்படுத்திக்கொள்ளுதல் வேண்டும் ; விண்ணப்பப்படிவத்திலுள்ள சான்றிதழிற் தத்தமது கைச்சார்த்தை இடுதலும் வேண்டும். பரீட்சைகள் ஆணையாளருக்குச் சொந்த வகையிலோ இத்திணைக்களத்தின் பிற எவ்வலுவலருக்கோ விண்ணப்பங்கள் முகவரியிட்டு அனுப்பிவைக்கப்படலாகா.

(இ) விண்ணப்பங்கள் எல்லா வகையிலும் முற்றமுழுதானவையாக இருத்தல் வேண்டும் கோரப்பட்டுள்ள தகவல் எல்லாவற்றையும் தன்னகத்துக்கொண்டிரா எவ்விண்ணப்பமாயினும் அதனதன் நலப்பாடுகளுக்கு ஏற்ப கணிக்கப்பெற்று, நிராகரிக்கப்படற்பாலதாம் நிலையை எய்தும்.

(ஈ) விண்ணப்பமொன்று அல்லது அத்தகைய விண்ணப்பம் தொடர்பான அஞ்சலொன்று அஞ்சற்படுத்தப்படுகையில் தொலைந்துள்ளது அல்லது தாமதப்படுத்தப்பட்டுள்ளது எனும் குற்றஞ்சார்த்துதல் எதுவும் கருத்திற்கொள்ளப்படக்கூடியதன்று. இறுதிச் சில நாட்கள்வரை தத்தமது விண்ணப்பங்களைக் காலந்தாழ்த்தும் பரீட்சார்த்திகள் தாந்தாம் இடருக்காளாகும் நிலையிலேயே அவ்வாறு செய்வர்.

8. **பரீட்சைக்கு அனுமதிக்கப்பெறல்.**—

(i) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள பரீட்சார்த்தியாகவுள்ளோர் யாபேருக்கும் பரீட்சை ஆணையாளரானவர் அனுமதி அட்டைகள் வழங்குவர். பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் பரீட்சை நிலைய மேற்பார்வையாளருக்குத் தத்தமது அனுமதி அட்டையைக் காண்பித்தல் வேண்டும். தமது அனுமதி அட்டையைக் காண்பிக்கத் தவறும் ஆண்/பெண் பரீட்சார்த்தி ஒருவர் பரீட்சைக்குத் தோன்ற அனுமதிக்கப்பெறார்.

(ii) பரீட்சார்த்திகள் தத்தமக்கு ஒதுக்கப்பெற்ற பரீட்சை மண்டபங்களில் பரீட்சைக்குத் தோற்றல் வேண்டும். ஆண்/பெண் பரீட்சார்த்தி எவரும் தமக்கென ஒதுக்கப்பட்ட பரீட்சை நிலையத்தைத் தவிர்ந்த பிற எந்நிலையத்திலாயினும் பரீட்சைக்குத் தோற்ற அனுமதிக்கப்பெறார். பரீட்சைக்குத் தோற்றும் ஆண்/பெண் பரீட்சார்த்தி ஒவ்வொருவரும் பரீட்சைநாளன்று தத்தமது அனுமதி அட்டையை மேற்பார்வையாளர்வசம் ஒப்படைத்தல் வேண்டும். பரீட்சார்த்திகள் அனைவராலும் பின்பற்றப்பட வேண்டியுள்ள விதிகளின் ஒரு தொகுப்பு இவ்வறிவித்தலின் ஈற்றில் வெளியிடப்பட்டுள்ளது. பரீட்சார்த்திகள் இவ்விதிகளினால் பிணைக்கப்படுவர்.

(iii) ஆண்/பெண் பரீட்சார்த்தியாகவுள்ளவர் ஒருவர் பரீட்சை நாளுக்குக் குறைந்தபட்சம் ஏழு (7) நாட்களுக்கு முன்பாகுதல் தமது அனுமதி அட்டை கிடைக்கப்பெற்றிலராயின், அதனை உடனடியாகப் பரீட்சை ஆணையாளர், அஞ்சல் அலுவலகப் பெட்டி 1503, கொழும்பு-2 க்கு அவர் அறிவித்தல் வேண்டும். (தந்தி முகவரி : " எக்ஸாம்ஸ் ", கொழும்பு, ஆகும்). அனுமதி அட்டை

கிடைக்கப்பெறுமை பரீட்சை ஆணையாளருக்கு அறிவிக்கப்படுகையில் பின்வரும் விபரங்களும் அளிக்கப்படல் வேண்டும் :—

(அ) பரீட்சையின் பெயர் ;
(ஆ) பரீட்சார்த்தியின் முழுப் பெயர் ;
(இ) முகவரி ;
(ஈ) விண்ணப்பம் அஞ்சற்படுத்தப்பட்ட திகதி ;
(உ) பதிவு எண்ணும் அஞ்சல் அலுவலகமும்.

(iv) பரீட்சைக்கு அனுமதிக்கப்பெறலானது தகவுத்திறன் ஏற்பு ஆகமாட்டாது. எவ்வாறாயினும், பரீட்சை ஆணையாளரானவர் தமது தற்றுணிபின்படிக்கு பரீட்சார்த்தியாகவுள்ளவர் ஒருவர்க்குத் தற்பொழுதைக்கான அனுமதி வழங்கலாம். அத்தகைய பரீட்சார்த்தியாக / விழைதல் அதன்பின்பு உறுதிப்படுத்தப்படும் அல்லது நீக்கப்படும்.

**9. ஆளடையாள அட்டைகள்.**—பரீட்சார்த்திகள் தாந்தாம் எழுத முன்வரும் ஒவ்வொரு பாடத்துக்கும் மேற்பார்வையாளரின் உளநிறைவுக்கேற்பப் பரீட்சை மண்டபத்திற் தத்தமது ஆளடையாளத்தைக் காண்பிக்குமாறு வேண்டப்படுவர். இந்நோக்கத்துக்காகப் பின்வரும் ஆவணங்களுள் எதுவாயினும் ஏற்றுக்கொள்ளப்படும் :—

(அ) அஞ்சலதிபர்-தலைமையதிபதியினால் வழங்கப்பெற்ற ஓர் ஆளடையாள அட்டை.

(ஆ) இப்பரீட்சைத் திகதிக்கு முற்பட்ட மூன்றாண்டுகளுக்கு அப்பாற்படாது வழங்கப்பெற்ற வலுவுள்ள ஒரு கடவுச் சீட்டு ("பாஸ்போற்").

(இ) இப்பரீட்சைத் திகதிக்கு முற்பட்ட மூன்றாண்டுகளுக்கு அப்பாற்படாது அரசுத் திணைக்களம், அரசாங்க யாக்கம், அல்லது சட்டவாக்கமான நிறுவனம் ஒன்றின் அதிகாரத்தின்மீது வழங்கப்பெற்ற, உரிமையாளரின் நிழற்படத்தை உள்ளடக்கிய சான்றிதழ், அதிகாரப் பத்திரம் பிற ஆவணம் ஏதேனுமொன்று.

(ஈ) கடவுச்சீட்டுப் பருமன் ("பாஸ்போற் ஸைஸ்") அளவினதான ஒரு நிழற்படம் (பரீட்சார்த்தியாகவுள்ளவரது கையொப்பம் இந்நிழற்படத்தின் மறுபுறத்தில் இடப்பெற்று, நிழற்படமும் கையொப்பமும் பரீட்சார்த்தியாகவுள்ளவருடையனவே எனத் திணைக்கள தலைவரினால் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பெற்ற ஓர் அலுவலரினால் சான்று படுத்தப்படல்வேண்டும். சான்றுபடுத்துபவருடைய பெயர், பதவிப்பெயர், திகதி, முகவரி ஆகியனவும் ஆங்கு தரப்பட்டிருத்தல்வேண்டும். மேற்பார்வையாளர் வசமே இந்நிழற்படம் வைத்திருக்கப்படுதல் வேண்டும்).

(உ) ஆட் பதிவுத் திணைக்கள ஆணையாளரினால் வழங்கப்பெற்ற ஓர் ஆளடையாள அட்டை.

**10. பொய்யான தகவல் அளித்தற்குத் தண்டனை.**—

ஒழுங்குவிதிகளுக்கிணங்க ஆண்/பெண் பரீட்சார்த்தியொருவர் இப்பரீட்சைக்குத் தகவுத்திறனற்றவர் எனக் காணப்படின், பரீட்சைக்குமுன், பரீட்சையின் போது அல்லது பரீட்சைக்குப்பின் எக்கட்டத்திலாயினும் தமது பரீட்சார்த்தியாந்தன்மை வலுவற்றுப் போவதற்கு அவர் ஆளாகற்பாலராவர். ஆண்/பெண் பரீட்சார்த்தியொருவரினால் அளிக்கப்பெற்ற விபரங்கள் எவையேனும் அவருடைய அறிவுக்கெட்டியவரையில் பொய்யானவையாகக் காணப்படின், அல்லது தொடர்புபட்ட மெய்ந்நிகழ்வு எதனையும் வேண்டுமெனவே அன்னார் வெளிப்படுத்தாது அடக்கியிருப்பாராயின் அவர் (ஆண்/பெண்) அரசுச் சேவையிலிருந்தும் சேவைநீக்கத்துக்கு ஆளாகற்பாலராவர்.

**11.** இவ்வொழுங்கு விதிகளில் ஏற்பாடுசெய்யப்படா விடயம் எதுவும் பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரது தற்றுணிபின்படிக்குக் கையாளப்படும்.

### மாதிரி விண்ணப்பப்படிவம்

### இலங்கைக் கடல்கடந்த சேவைக்கு ஆட்சேர்ப்புக்கான பரீட்சை—1973

சுட்டு எண் :

(அலுவலக பயன்பாட்டுக்கு மாத்திரம்)

1. (i) சொந்தப் பெயர் முதல், எழுத்துக்களுடன் :————.
(ii) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்கள் :————.

2. முழு முகவரி :————.
(அரசு/உள்ளூராட்சி/அரச யாக்கங்களில்/சபைகளில் சேவைகளிலுள்ளோர் அலுவலக முகவரியை அளித்தல் வேண்டும்)

3. தாங்கள் இலங்கைப் பிரசையாக இருப்பது வமிசாவழியாகவா அல்லது பதிவினாலா எனக் குறிப்பிடுக :————.

4. (i) பிறந்த திகதி :————.
(ii) 1973, செத்தெம்பர் 14 ஆம் திகதியன்று வயது :————.
ஆண்டுகள்————; மாதங்கள்————, நாட்கள்————.

5. (i) அரசில்/உள்ளூராட்சியில்/அரசு யாக்கத்தில்/சபைச் சேவையில் வகிக்கப்படும் தற்போதைய பதவி :————.
(ii) நியமனத் திகதியைத் தருக :————.
(அரசுச் சேவையில்/உள்ளூராட்சியில்/அரசயாக்கங்களில்/சபைகளின் சேவைகளில் உள்ள அபேட்சகர்களால் நிரப்பப்பட வேண்டியது)

6. ஆண், பெண் ? :————.

7. *பரீட்சைக்குத் தோற்றும் மொழி ஊடகம் :————.

8. (i) பல்கலைக்கழகப் பட்டம் வழங்கப்பெற்ற திகதி :————.
(ii) பல்கலைக்கழகம் :————.
(iii) பாடங்கள் :————.
(iv) (சித்தியில் ஈட்டப்பெற்ற) வகுப்பு :————.
(v) உயர்தரமா, கீழ்த்தரமா ? :————.

9. கடல்கடந்த சேவைக்கு ஆட்சேர்ப்புக்கான பிற எப்பரீட்சைக்காயினும் தாங்கள் தோற்றியுள்ளீர்களாயின் :
(i) அத்தகைய தடவைகளின் எண்ணிக்கையும் :————.
(ii) அவை நடந்தேறிய ஆண்டுகளையும், குறிப்பிடுக :————.

10. பணப் பற்றுச்சீட்டை, ஒரு பகுதி (பசையிட்டு) ஆயின் உறுதியாக ஒட்டுக :————.

11. அபேட்சகரால் அளிக்கப்படும் சான்றிதழ் :————.
அரசுச் சேவையில்/அரசு யாக்கத்தில்/உள்ளூராட்சியில்/சபைச் சேவையில், அதாவது ..........................
இல் ஒரு ..........................யான் நிரந்தர நியமனம் வகிக்கிறேன் :————.

(அ) 1973, செத்தெம்பர் 14 ஆம் திகதிக்கு நேரடுத்து முந்திய ஐந்து (5) ஆண்டு காலவெல்லையொன்றுள் அரச/உள்ளூராட்சி/அரச யாக்க/சபை சேவையில் (எச்சரிக்கைகள் புறநீங்கலான) எவ்வகைத்தான ஒழுக்காற்றுத் தண்டனைக்கும் ;

(ஆ) ............ காலவெல்லைக்குள் யான் ஆளாகியுள்ளேனல்லேன் என உறுதியுடையளிக்கிறேன் :

எனது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய அளவில் இப்படிவத்தில் தரப்பட்டுள்ள தகவல் உண்மையானது. எனவும், பரீட்சைக் கட்டணம் இறுக்கப்பட்டதற்தான ............ ஆம் திகதிய ............ஆம் எண் கொண்ட பற்றுச்சீட்டை யான் ஈண்டு ஒட்டியுள்ளேன். பரீட்சைகளைக் கட்டுப்படுத்தும் விதிகளுக்கும், இப்பரீட்சையினது ஒழுங்குவிதிகளின்படிக்கு யான் அருகதையற்றவன் எனப் பரீட்சைக்கு முன்பு பரீட்சையின் போது அல்லது பரீட்சையின் பின்பு கண்டுபிடிக்கப்படின் எனது அபேட்சகாந்தன்மை நீக்கத்துக்கு என எடுக்கப்படக்கூடிய எத்தீர்மானத்துக்கும், இயைந்தொழுக யான் உடன்படுகின்றேன்.

————,
அபேட்சகரின் கையொப்பம்.

திகதி :————.

*இப்பரீட்சைக்கு அபேட்சகர் எம்மொழி ஊடகமூலம் தோற்றுகிறாரோ, அம்மொழி ஊடகமூலமே விண்ணப்பப்படிவம் நிரப்பப்படல்வேண்டும்.

விண்ணப்ப ஏற்பு இறுதித் திகதியின் பின்னர், விண்ணப்பப் படிவத்தில் காட்டப்பட்ட, பரீட்சைக்குத் தோற்றும் மொழி ஊடகத்தில் மாற்றம் எதுவும் அனுமதிக்கப்படமாட்டாது.

† (அ) ஐந்து வருட அனுபவமோ அல்லது அதற்கு மேலுள்ள அலுவலர்க்குப் பொருந்தும்.

(ஆ) ஐந்து வருட அனுபவத்திற்குக் குறையாத சேவை அலுவலர்க்குப் பொருந்தும்.

**දෙපාර්තමේන්තු ප්‍රධානයාගේ සහතිකය**

රාජ්‍ය/රාජ්‍ය සංස්ථා/පළාත් පාලන/මංඩල සේවයේ නියුක්ත අපේක්ෂක අපේක්ෂිකාවන් පිළිබඳ සහතිකය

........................................මහතා/මහත්මිය/මෙනෙවිය/රාජ්‍ය/පළාත් පාලන/රාජ්‍ය සංස්ථා/මංඩල සේවයෙහි නියුක්තව සිටිමින් 1973.9.14 වැනි දිනට පූර්වාසන්නයේ වූ පස් අවුරුදු කාලය තුළ/1973.9.14 වැනි දිනට පූර්වාසන්නයේ වූ පස් අවුරුද්දකට අඩු වූ ඉළු සේවා කාලය තුළ ඔහුගේ/ඇයගේ

වේතනාදික සියල්ලම ලැබෙයගෙන ඇති බවත්, ඔහු/ඇය මොනම ආකාරයක හෝ විනයානුකූල දඬුවමකට (අවවාද කිරීම හැර) භාජනය වී නොමැති බවත් මම සහතික කරමි.

මෙම ඉල්ලුම් පත්‍රයෙහි 4 සහ 8 යන කොටුවල සපයා ඇති තොරතුරු, වාර්තා හා සන්සන්දනය කොට පරීක්ෂා කළ බවත්, ඒවා නිවැරදි බවත්, අපේක්ෂකයා/අපේක්ෂිකාව මා ඉදිරිපිට දී අත්සන් කළ බවත්, තවදුරටත් මෙයින් සහතික කරමි.

.....................................
දෙපාර්තමේන්තු/ආයතන ප්‍රධානයාගේ
හෝ ඔහු විසින් බලය පවරන ලද
නිලධාරියාගේ අත්සන.

.....................................
නම,

.....................................
පදවි නාමය,

දිනය : ..........................

ස්ථානය : ..........................

## இலங்கை கடல்கடந்த சேவைக்கு ஆட்சேர்ப்புக்கான பரீட்சை
### ஆட்சேர்ப்புத் திட்டம்

*பரீட்சை மொழி*

இப்பரீட்சையானது சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழி களில் நடாத்தப்பெறும்.

(i) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படுமிறுதித் திகதிக்குப் பின்பு பரீட்சை மொழியை மாற்றுதற்குப் பரீட்சார்த்தி கள் அனுமதிக்கப்பெறார்.

(ii) பரீட்சார்த்தியொருவர் இப்பரீட்சையின் ஆங்கிலம் என்னும் விடைத்தாள் தவிர்ந்த எல்லா விடைத்தாள்களையும் ஒரு பரீட்சை மொழியில் மாத்திரமே எழுதுதல் வேண்டும்.

*பாடங்கள்*

இப்பரீட்சை பின்வரும் பாடங்களை உள்ளடக்கும் :—

| | | | | |
|---|---|---|---|---|
| (i) வியாசம் | ... 1 | விடைத்தாள் | 100 | புள்ளிகள் |
| (ii) பொது அறிவு | ...1 | விடைத்தாள் | 150 | புள்ளிகள் |
| (iii) உலக அலுவல்கள் | ...1 | விடைத்தாள் | 150 | புள்ளிகள் |
| (iv) ஆங்கிலம் மொழி | ...1 | விடைத்தாள் | 100 | புள்ளிகள் |

போதிய அளவு உயர்மட்டத்திற் புள்ளிகள் ஈட்டும் பரீட்சார்த்தி கள் நேர்முகச் சோதனையொன்றுக்கு வரவழைக்கப்பெறுவர். நேர் முகச் சோதனையில் வழங்கப்படற்பாலதான உச்சப் புள்ளிகள் இரு நூறு (200) ஆகும்.

*இலங்கைக் கடல்கடந்த சேவையில் நியமனத்துக்குத் தெரிவுசெய் யும் முறை*

எழுத்துருச் சோதனையிலும் நேர்முகச் சோதனையிலும் உச்ச, மொத்தப் புள்ளிகளை ஈட்டுவோருள்ளிருந்தே இலங்கைக் கடல் கடந்த சேவையின் தகுதிகாண் நிலையினரை நியமனஞ் செய்தற் பொருட்டான இறுதித் தெரிவு நடைபெறும்.

பிறவாறு குறித்துரைக்கப்பட்டிருந்தாலன்றி வினாத்தாள்கள் யாவும் மூன்று மணித்தியாலங்கள் நீடிப்பனவாகும்.

### எழுத்துருவிலான பரீட்சை

*வியாசம்*

இவ்வினாத்தாளில் தரப்பட்டுள்ள பரந்த எல்லைக்குட்பட்ட பல விடயங்களுள்ளிருந்து தெரிவுசெய்யப்பெறும் ஒரு விடயத்தைப் பற்றிப் பரீட்சார்த்தியானவர் ஒரு வியாசம் எழுதும்வண்ணம் எதிர்பார்க்கப்படுவர். இவ்விடயங்கள், எவ்விசேட கல்வித் துறை யுடனாவது தொடர்புடையனவாக இராது, ஆண்/பெண் பரீட்சார்த் தியினது பொது அறிவையும் புத்திக்கூர்மையையும் மாத்திரமன்றி, சிந்திக்கும், எடுத்துரைக்கும் ஆற்றல்களில் அன்னார் கொண்டுள்ள திறமையையும் சோதிக்கும் குறிக்கோளுடன் அமைக்கப்பட்டுள் ளன. விடயத்தை எடுத்தாளுதலிலுள்ள ஆழ்சிந்தனை, தன் முதன்மை ஆகியவற்றின் தரத்தையும் கொண்டு இவ்வியாசங்கள் மதிப்பிடப்படும். துலாபரமாகவும் வாசிக்கக்கூடிய வகையிலும் வியாசங்கள் எழுதப்படல்வேண்டும்.

*பொது அறிவு*

பரீட்சார்த்தி வாழவிருக்கும், வேலைசெய்யவிருக்கும், சூழலைப் பற்றி அவருக்குள்ள உணர்வைச் சோதிக்கும் குறிக்கோளுடன் இப் பொது வினாத்தாள் அமைக்கப்பட்டுள்ளது. இச்சூழலானது இலங் கையின் அரசியல், சமூக, கலாச்சார, பொருளாதாரச் சூழலும் அனைத்துநாட்டுப் புவியியல்—அரசியற் சூழலும், விஞ்ஞான, தொழில் நுட்பச் சூழலுமாகும்.

*உலக அலுவல்கள்*

உலக அலுவல்கள்பற்றி, சிறப்பாக இன்றைய உலகுடன் தொடர்பு பட்ட வகையில், பரீட்சார்த்தியின் அறிவைச் சோதிக்கும் குறிக் கோளுடன் இவ்வினாத்தாள் அமைக்கப்பட்டுள்ளது. இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை, வெளிநாட்டுத் தொடர்புகள், சம்பந்த மாக இலங்கை விசேட அக்கறை கொண்டுள்ள விடயங்கள் இவற் றுள் அடங்கும்.

*ஆங்கில மொழி*

இவ்வினாத்தாளானது, அபேட்சகர் இம்மொழியை விளங்கிக் கொள்ளுமாற்றலைச் சோதிக்குந் நோக்கத்தைக்கொண்டிருப்பதோடு சுருக்கியெழுதுதல், ஒரு கட்டுரை, விளங்கிக்கொள்ளுமாற்றலைச் சோதிக்கும் வகையிலமைந்த விடயங்கள் ஆகியவற்றை உள்ளடக் கும்.

*நேர்முகச் சோதனை*

பரீட்சார்த்திகளின் பண்பு. நலன்களையும், வெளிநாடுகள், அனைத்து நாட்டலுவல்கள், அனைத்துநாட்டுச் சட்டம், பிறமொழி கள் ஆகியன பற்றிய விசேட அறிவையும், கருத்திற்கொண்டு, கடல் கடந்த சேவைக்கு அவர்களது பொருத்தமுடைமையை உறுதிப் படுத்தும் நோக்குடன் இந்நேர்முகச் சோதனை நடாத்தப்பெறும்.

வி. ரி. ஜயசிங்ஹ,
செயலாளர்,
பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள்
அமைச்சு.

பாதுகாப்பு, வெளிநாட்டலுவல்கள் அமைச்சு,
குடியரசுக் கட்டடம்,
கொழும்பு,
1973.08.31.

## இலங்கை பரீட்சைத் திணைக்களம்
### பரீட்சார்த்திகள் கவனிக்கவேண்டிய விதிகள்

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்து கொள்ள வேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட் சாதிகாரியின் விரகின்படி கீழ்க்காணும் தண்டனைகளில் ஒன் றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர் :

(i) முழுப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர் அல் லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படு வர் ; ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலி ருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்.

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப் படுவர்.

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம் வரை பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்து வைக்கப்படுவர்.

(vi) பரீட்சார்த்தியின் நடத்தைப்பற்றி அவருடைய மேலதி காரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட் சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலி சாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும் பொழுதோ, பரீட் சைக்குப் பின்னரோ, தேவையான நடவடிக்கை எவையேனும் அவ சியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால், அத்தீர்மானம் முடிவான தாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட் சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதி காரியின் தீர்மானம் அரச சேவைகள் ஆலோசனைச் சபையால் பரி சீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

### விதிகள்

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்களுக்கோ வசதியீனத் தையும் தொந்தரவையும் உண்டுபண்ணும்ல் நடந்துகொள்ள வேண் டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் பொழுதும் வெளியே றும் பொழுதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட் பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்வரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்திற் பூரண அமைதி நிலவச் செய்யவேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றப் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையை விட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக் கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமுஞ் செய்யக் கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைச் தமது விடைத்தாளில் குறிந்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்தாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ் விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந் தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடையெழுதுந் தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரைமணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்த பின்னர்தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேகவும் அனுமதிக்கப்படுவர்; செய்கைமுறை அல்லது வாய்மொழிப் பரீட்சையைப் பொறுத்தவரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை, மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப்புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலும் சேதப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியனவற்றை ஒழுங்காக கீறிவிட வேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பல்விடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிலிருந்தால், சித்திரத்தில் அலங்காரரூபச் சித்திரமும் கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக்கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய் செப்பு, பார்சல் முதலியவற்றை, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப் பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்குள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்துள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிடல் வேண்டும். இந் நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால், பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்ல விடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும் மீண்டு வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

14. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறெவரிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்படல் வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்கு மேல் விடக்கூடாது.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி மேல்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்—

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தபட்சம் 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுதற்குரிய தகுதியைப்பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப் பாடம் தொடங்கு முன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக் கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப் பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப் பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படக்கூடும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய, விடைத்தாள் ஒற்றுத்தாள், கன்னரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால், அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல்மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும், சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுபட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப்பென்சில்கள், வர்ணக் கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டு வருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதும் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக் கோடு விடப்படல் வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்படல் வேண்டும். அல்லது சில வெற்றுக் கோடுகள் விடப்படல் வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில், வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக வலது பக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறையான அமைப்பு முறையில் தருக. வரைப்படங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைப்படத்தை அல்லது கோட்டுருபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை விடைத்தாளின் மறுபக்கத்திலும் தொடரப்படுமானால், அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்படல் வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும் அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும்வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற்போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகனிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெற வேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக் காட்டல் வேண்டும்.

பரீட்சைத் திணைக்களம்,
மலே வீதி,
கொழும்பு 2.

போகொட பிரேமரத்ன,
பரீட்சை ஆணையாளர்.

10-223—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

---

இல. 1/23/35/7(ஜீ)

**நாட்சம்பள அமயத் தட்டெழுத்தாளர்க்கும் சுருக்கெழுத்தாளர்க்கும் நிரந்தர நிலை அளிப்பதற்கான தகுதிப் பரீட்சை—ஒற்றோபர் 1973**

1973, யூலை 13 ஆந் தேதிய 68 ஆம் இலக்க இலங்கைக் குடியரசு வர்த்தமானியின் பகுதி I பிரிவு (II அ) இல் வெளியிடப்பட்ட மேற்கூறிய பரீட்சை சம்பந்தமான அறிவித்தலுக்கு பரீட்சார்த்திகளின் கவனம் வேண்டப்படுகின்றது.

2. மேற்கூறிய பரீட்சை கொழும்பில், 1973, ஒற்றோபர் 10 ஆந் திகதியல்லாது ஒற்றோபர் 20 ஆந் திகதியன்றே பரீட்சை ஆணையாளரால் நடாத்தப்படுமென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

பி. எச். சிறிவர்த்தன,
அரசாங்க நிருவாக, உள்ளூராட்சி, உண்ணாட்டலுவல்கள் அமைச்சுச் செயலாளரும், அரசாங்க நிருவாகப் பகுதிப் பணிப்பாளர் அதிபதியும்.

அரசாங்க நிருவாகத் திணைக்களம்,
கொழும்பு 7, 1973, செத்தெம்பர் 24.

10-49—05.10.73 ந் திகதிய வர்த்தமானி இல. 80

## அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்

01.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது

# "இலங்கைக் குடியரசு வர்த்தமானி"

## வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. தனிப்பட்ட விளப்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. **சனிக்கிழமைகளில்** மு. ப. 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையும், மற்றும் நாட்களில் மு. ப. 8.00 மணி முதல் பி. ப. 3.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. **சனிக்கிழமைகளில்** மு. ப. 11.00 மணிக்கும், மற்றும் நாட்களில் பி. ப. 2.00 மணிக்கும் **பணம் கொடுக்கல் வாங்கல்** முடிவுறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிறீம் கோட் புறெக்ரருல்" **கையொப்பமிடப்பட்டு** அல்லது **கையொப்பம்** அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 01 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | | | ரூ. | ச. |
|---|---|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குச் குறைய .. | .. | .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதி | .. | .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. | .. | .. | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | .. | .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைக் குடியரசு வர்த்தமானி வெளியிடப்படும்.** அரசாங்க விடுமுறை **இடையிடின்** வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 01 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம்** அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு, அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

31. **சந்தா விபரம் 01.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் :—**

| **இலங்கைக் குடியரசு வர்த்தமானி** (வருடத்திற்கு) | | | உள்ளூர் | | | வெளியூர் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | ரூ. | ச. | | ரூ. | ச. |
| ஒவ்வொரு பகுதியும் .. | .. | .. | 46 | 0 | .. | 60 | 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. | .. | .. | 36 | 0 | .. | 42 | 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் | .. | .. | 43 | 50 | .. | 51 | 50 |

**ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.**

### தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | விலை | | | தபாற் செலவு (உள்ளூர்) | |
|---|---|---|---|---|---|
| | ரூ. | ச. | | ரூ. | ச. |
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. | 0 | 50 | .. | 0 | 20 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. | 1 | 0 | .. | 0 | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 30 | .. | 0 | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 60 | .. | 0 | 15 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி இல. 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

**இலங்கைக் குடியரசு வர்த்தமானி** சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். **வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி** வெளியிடப்படும். **வர்த்தமானிக்குரிய** அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாறறப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தலகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்களை தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| ஒற்றோபர் | 5.10.73 | வெள்ளி | 25. 9.73 | செவ்வாய் | ந.ப. 12.00 |
| | 12.10.73 | வெள்ளி | 3.10.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 19.10.73 | வெள்ளி | 10.10.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 26.10.73 | வெள்ளி | 17.10.73 | புதன் | ந.ப. 12.00 |
| நவெம்பர் | 2.11.73 | வெள்ளி | 24.10.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 9.11.73 | வெள்ளி | 31.10.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 16.11.73 | வெள்ளி | 7.11.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 23.11.73 | வெள்ளி | 14.11.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 30.11.73 | வெள்ளி | 21.11.73 | புதன் | ந.ப. 12.00 |
| திசெம்பர் | 7.12.73 | வெள்ளி | 28.11.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 14.12.73 | வெள்ளி | 5.12.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 21.12.73 | வெள்ளி | 12.12.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 28.12.73 | வெள்ளி | 19.12.73 | புதன் | ந.ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
*அரசாங்க அழுத்தகர்.*

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது